மலர்-4 இதழ்-81 ஜனவரி 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்**

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play



இலவச
e- book

# ஐயப்பன் குளித்த உரல்குழி தீர்த்தம்

# தீராத நோய் தீர்க்கும் சிரஞ்சீவி மந்திரம்



ஓம் ஸ்ரீ ஆஞ்சனேயாய நமஹ|
ஓம் ஸ்ரீ பரசுராமாய நமஹ|
ஓம் ஸ்ரீ மார்க்கண்டேயர் நமஹ|
ஓம் ஸ்ரீ மகாபலி சக்கரவர்த்தி நமஹ|
ஓம் ஸ்ரீ வேதவியாசாய நமஹ|
ஓம் ஸ்ரீ அஸ்வத்தாமா நமஹ|
ஓம் ஸ்ரீ விபீஷணாய நமஹ|

வலது கையில் ஒரு செம்புப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்து ஒன்றிரண்டு அருகம்புல் போட்டு வடக்கு நோக்கி அமர்ந்தோ நின்றோ சிரஞ்ஜீவிகளான இந்த எழுவரின் நாமங்களையும் 21 தடவை ஜெபித்து பின்னர் அந்த நீரை அருந்தி வர தீரா நோய்கள் தீருவதுடன் அகால மரணம் ஏற்படாமல் காக்கும்.

முடியாதவர்கள் எழுந்த உடனும் உறங்கும் முன்னரும் முறை யாவது ஜெபித்து வர மேற்கண்ட பலனில் பாதி கிட்டும்.

ஏதேனும் மருந்துகள் பயன் படுத்தும் போதும் குறைந்தது ஒரு முறையேனும் இந்த மந்திரங்களை ஜெபித்த பின் மருந்து உண்டால், நோய் விரைவில் குணமாகும்.

## உணவு

- ❖ நிலவின் ஒளியில் உண்ணக் கூடாது. பௌர்ணமியில் நிலாச் சாப்பாடு தனியாகச் சாப்பிடக் கூடாது. பலருடன் சேர்ந்து சாப்பிடலாம்.
- ❖ இருட்டிலோ நிழற்படும் இடங்களிலோ உண்ணக் கூடாது.
- ❖ சாப்பிடும் பொழுது நடுவில் எழுந்து சென்று மீண்டும் வந்து சாப்பிடக் கூடாது. நின்று கொண்டு சாப்பிடக் கூடாது.
- ❖ அதிக கோபத்துடன் உணவு உண்ணக் கூடாது.
- ❖ சாப்பிடும் போது தட்டினைக் கையில் எடுத்துக் கொண்டு உண்ணக் கூடாது. தட்டை மடியில் வைத்துக் கொண்டும் படுத்துக் கொண்டும் உண்ணக் கூடாது.

## வாழ்க்கை

- ❖ இரண்டரை மணிநேரம் பார்க்கும் சினிமாவிற்கே போரடிக்காமல் இருக்க வில்லன்கள் தேவைப்படும்போது... நீண்ட நெடிய நம் வாழ்க்கைக்கு சில எதிரிகளும், பல துரோகிகளும் இருப்பதில் தவறில்லை.
- ❖ அதர்மம் தலைவிரித்தாடும் போதெல்லாம் அழிவு வரும். அதற்காக தர்மம் எத்தகைய உருவத்தையும் தாங்கி வரும்.





## ஸ்ரீருத்ரம் சொல்லும் முறை

11 முறை ருத்ரம் சொல்வது, 'ஏகாதச ருத்ரம்' எனப்படும்.

இதை 11 நபர்கள் 11 முறை சொல்வர் எண்ணிக்கை 121 வரும் இதை 'லகு ருத்ரம்'.

லகு ருத்ரத்தை 11 முறை கூறினால், மஹா ருத்ரம்.

இந்த மஹாருத்ரத்தை 11 முறை பாராயணம் செய்வது, 'அதிருத்ரம்'.

பொதுவாக கோயில்களில் 121 முறை ருத்ர பாராயணம் (லகுருத்ர பாராயணம்) செய்து, 'ருத்ராபிஷேகம்' செய்வது வழக்கம். இது எல்லாக் கோயில்களிலும் நடக்கும். மஹாருத்ரம், அதிருத்ரம் போன்ற நிகழ்வுகள், எப்போதாவது ஏதேனும் பெரிய சிவஸ்தலங்களில் நடைபெறும். இவற்றை ஒரு நாளில் செய்ய முடியாது. நாள்கணக்கில் செய்ய வேண்டும். அபூர்வமாகத்தான் காண முடியும்.

ஒருசில கோவில்களில் உலக நலன் வேண்டி இதுபோன்ற மஹாருத்ரம், அதி ருத்ரம் போன்ற நிகழ்வுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீருத்ரத்தை வீடுகளில் படித்தாலோ, அல்லது ஒலிக்கப்பெற்றாலோ வீடுகளில் உள்ள தீய சக்திகள் எளிதாக மறைந்துவிடும்.



## குழந்தைகள் படிக்க...

நன்றாக படிக்கும் குழந்தைகள் திடீர் என்று படிப்பில் ஆர்வம் குறையும். அதேபோல பெரியோர்களுக்கு கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணையையும், தன் குலத்தை காக்கும் குலதெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்ணையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும்.



## கெட்ட குணமும் நோய்களும்

- பெருமையும், கர்வமும் இதய நோய்களை உருவாக்கும்.
- கவலையும், துயரமும் வயிறு சம்பந்தப் பட்ட நோய்களை உருவாக்கும்.
- துக்கமும், அழுகையும் சுவாச நோய் களை உருவாக்கும்.
- பயமும், சந்தேகமும் சிறுநீரகத்தை சீரழிக்கும்.
- எரிச்சலும், கோபமும் கல்லீரல் நோய் களை உருவாக்கும்.
- அமைதியும், மகிழ்ச்சியும் அனைத்து நோயையும் குணமாக்கும்.

சிந்தனைக்கு ஏற்பதான் நமது உடலில் உள்ள சுரப்பிகளின் வேலை நடைபெறு கின்றன.

சந்தோஷமாக இருந்தால் நல்ல ஜெல் சுரக் கும். இல்லையேல் அமிலம் போன்று சுரந்து உடல் கேடாகும்.

# கேன்சர், சர்க்கரை நோய் பிரச்சனையை தீர்த்து வைக்கும் விரதங்கள்

இந்துமதத்தில் விரதமுறை என்பது இறைநிலையை அடைய உதவும் வழிமுறைகளில் ஒன்றாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான கடவுள்களுக்கு குறிப்பிட்ட நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஒதுக்கப்பட்டு, விரத முறைகளை கடைபிடித்து வருகின்றனர்.

இவ்வாறான விரத வழிமுறைகளை ஆராய்ந்து பார்த்தால், இறைவனுக்கும் விரத முறைக்கும் நேரடி தொடர்பு என்பது இல்லாமல் இருக்கும்.

உண்மையில் விரதம் என்பது மனித உடலுக்கும், ஆரோக்கியத்திற்கு மட்டுமே தொடர்பு உள்ள ஒரு வழிமுறையாகும், ஆனால் இந்த விரத முறையை நமது முன்னோர் ஆன்மிகத் துடன் இணைத்து வைத்ததிலும் மிகப்பெரிய சூட்சுமங்கள் உண்டு.

அக்கால வாழ்க்கை முறைக்கும், இக்கால வாழ்க்கை முறைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

இயற்கையைச் சார்ந்த உணவை மட்டுமே அக்காலத்தினர் பயன்படுத்தினர், ஆனாலும் அவர்கள் இதுபோன்ற விரத முறையை கடைபிடித்ததால் அக்காலத்தில் ஆயுள் கூடியிருந்தது, ஆனால் இக்காலத்தில் இயற்கைக்கு மாறாகவும், செயற்கை வழிமுறைகளையும் அதிகளவு பயன்படுத்தி சுவை கூட்டப்படும் உணவு முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

ஒரு ஜான் அளவுள்ள நாக்கிற்கு முக்கியத்துவம் தரப்படும் உணவு முறையால் தற்போது நோய்களும் பெருகிய வண்ணம் உள்ளது, பிறந்த குழந்தைக்குக் கூட சர்க்கரை நோய் உள்ள காலமாக மாறியுள்ளது.

சர்க்கரை நோய், கேன்சர், பி.பி. போன்ற நோய்கள் சர்வ சாதாரணமாக அனைவருக்கும் வந்த வண்ணம் உள்ளது, ஆனாலும் இதை தடுக்கும் வழிமுறைகள் விஞ்ஞான பூர்வமாக ஏதும் இல்லை, சம்பாதிக்கும் பணத்தில் பாதியளவு மருந்து, மாத்திரைக்கு செலவழிப்பதோடு சரி, நோயை கட்டுப்படுத்த மட்டுமே முடிகிறது, போக்க முடிவதில்லை.

ஆனால் நமது முன்னோர் இதற்கு எளிமையான வழிமுறையை கூறியுள்ளனர். இதுபோன்ற பிரச்சனைகளை மட்டுமல்ல, மன உளைச்சல், இரத்தசோகை, சுறுசுறுப்பின்மை போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெற்று சுறுசுறுப்புடனும், ஆரோக்கியத்துடனும் வாழ நம் முன்னோர் கூறிய வழிமுறைதான் விரத முறை.

இந்த விரத முறையை கடைபிடித்தாலே மேற்கண்ட நோய்கள் அனைத்திலிருந்தும் பரி பூரணமாக நலம் பெறலாம். வாரம் மூன்று நாட்கள் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை விரதம் இருந்தாலே மனிதர்களுக்கு எந்த நோயும் அண்டாது.

திங்கள்கிழமை............. பரமசிவனுக்கும்,
வெள்ளிக்கிழமை ............ அம்பாளுக்கும்,
ஞாயிற்றுக்கிழமை .................குருவுக்கும்

விரதமிருந்தால் போதும் நோய் ஏதும் அண்டாமல், வாழ முடியும் என்று இயற்கை மருத்துவ விதிமுறைகள் உள்ளன.

இந்த வழிமுறையை சாதாரணமாக கூறினால் மக்கள் கடைபிடிக்க மாட்டார்கள் என்பதால்தான், நம் முன்னோர்கள் இந்த விரதமுறையை ஆன்மிகத்துடன் இணைத்தனர்.

இந்த விரதமுறையை அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்பதால் மூன்றுவகையாக இந்த விரத வழிமுறைகளை அமைத்துள்ளனர்.

1. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தண்ணீர்கூட அருந்தாமல் விரதம் கடைபிடிக்கலாம்.
2. இவ்வளவு கடுமையாக இருக்க முடியாதவர்கள் வெறும் தண்ணீரை மட்டும் அருந்தி இவ்விரதத்தை கடைபிடிக்கலாம்.
3. இன்னும் சற்று வயதான, சில நோய்களின் தாக்கம் உள்ளவர்கள், தண்ணீர் மற்றும் திரவ வடிவிலான பழச்சாறுகளை மட்டும் அருந்தி இந்த விரதத்தை கடைபிடிக்கலாம்.



## வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு காலை 6 முதல் மாலை 6 வரை


ஆன்மிகமலர் மெயில் புக்

### ஏற்படும் நன்மைகள்

தண்ணீர் கூட அருந்தாமல் வாரத்திற்கு மூன்று நாட்கள் இவ்விரத முறையை தொடர்ந்து ஆறு மாதக் காலத்திற்கு கடைபிடித்தால் உடலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்வதை கண் கூடாக பார்க்கலாம்,

- ❖ உடல் சோர்வு நீங்கும்.
- ❖ ரத்த சோகை போன்ற நோய்கள் மறையும்.
- ❖ சர்க்கரை நோய் மெல்ல மறையும்.
- ❖ கேன்சர் போன்ற நோய்கள் கட்டுக்குள் வரும்.
- ❖ மலம் சம்பந்தமான பிரச்சனைகள் குறையும்.
- ❖ ஆண், பெண், மலட்டுத்தன்மை தடுக்கப் படும்.
- ❖ சுவாசப் பிரச்சனைகள் கட்டுப்படும்.
- ❖ உடல் புதுப்பொலிவு அடைவதை உணரலாம்.

### உதாரணம்

உடலுக்கு தேவையான சக்திகளை, நமது செயல்பாடுகளே புதுப்பித்துக்கொள்ளும் வகையில்தான் நமது உடல் அமைக்கப்பட்டுள்ளது, ஆனால் சுகம், சுவை, மகிழ்ச்சி, இன்பம் போன்ற காரண காரியங்களால் நமது உடல் உறுப்புகளை அடிமைப்படுத்தி வருகிறோம், இதன் காரணமாகத்தான் பல் வேறு நோய்கள் மனித குலத்தை தாக்குகிறது.



சபரி மலைக்கு மாலை அணிந்து விரத முறையை சரியான முறையில் கடைபிடிப் பவர்கள், அந்த விரத நாட்களில் மிகுந்த புத்து ணர்ச்சியுடன் காணப்படுவார்கள், அதற்கும் காரணம் உண்டு, அவர்கள் புகையிலை, மது, மாமிசம், தவறுதலான உணவு முறை, அதிகப்படியான தூக்கம், பாதத்தை பலப்படுத்த காலணி இன்றி நடப்பது போன்ற வழிமுறைகளை கடைப்பிடிப்பதால் புத்துணர்ச்சியுடன் இருப் பார்கள், விரதம் முடிந்ததும் மீண்டும் பழைய வாழ்க்கை முறைக்கு திரும்பும் போது, உடலும் பழைய நிலைக்கு திரும்பும்.

இதை மாலை அணிந்து விரதம் இருந்தவர்கள் கண்கூடாக காணும் உண்மையாகும்.

இதற்காகத்தான் நம் முன்னோர் உடலுக்கு சக்தி தரும் விரத முறையை ஆன்மிகத்துடன் இணைத்தனர்.

### ஆக்கப்பூர்வ சிந்தனை:

பொதுவாக விரத முறையை கடைபிடிக்கும் போது, விரதமிருந்து அடுத்த நாள் வயிறு முட்ட சாப்பிடுவது, காரசாரமாண உணவை விரும்பி எடுப்பது போன்றவற்றையும் மனம் நாடும், இதை கட்டுப்படுத்துங்கள், மேலும் யோகா, தியானம் மூச்சுப் பயிற்சி போன்றவற்றை செய்பவர்கள் இந்த விரத முறையை கடைபிடித்தால் மூளை யில் உள்ள செல்கள் புதுப்பிக்கப்பட்டு, ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் தோன்றும், எதிர்மறை எண்ணங்களிலிருந்து விடுபட விரத பலன்களுடன் யோகா, தியானம் போன்றவை சேரும்போது இதை



அனுபவப்பூர்வமாக உணர முடியும்.

முடிந்த அளவு படிப்படியாக வாரம் ஒருநாளை தேர்ந்தெடுத்து மேற்கூறிய விரத முறையை கடைபிடித்து பாருங்கள்... பலன் தெரிய ஆரம்பிக்கும்போது வாரத்தின் மூன்றுநாட்களை கடைபிடிக்க முயற்சி செய்யுங்கள்.

விரதம் என்பது நம் உடம்பை பேணிக்காக்கவே தவிர, இதனால் இறைவனுக்கு எந்தவித பலனும் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள், இறைவன் பெயரால் செய்யும்போது, இறைவனுக்கு பயந்து விரதமுறையை துல்லியமாக மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதால்தான் நம் முன்னோர் விரத முறையை இறைவனுடன் இணைத்து மற்றவர்களுக்கு வழிகாட்டியுள்ளனர்.

விரதத்தின் பெயர்கள், வகைகள் என்று ஏராளமாக இருந்தாலும், வாரத்தின் 3 நாட்கள் விரதம் கடைப்பிடிப்பது என்பது பொதுவான விரத முறையாகும். தற்போதைய காலகட்டத்தில் நோய் நொடி தாக்கத்திலிருந்து தப்பிக்க மேற்கூறிய விரதமுறை மிகப்பெரிய பலனை தரும்.

அதே சமயம் விரதத்தின் வகைகள் பெயர்களையும்நாம் அறிந்து வைத்துக்கொள்வது நன்மை தரும். அதைப்பற்றி பார்ப்போம்.

### விரதத்தின் வகைகள்:

சந்தாபண விரதம்
மஹாசந்தாபண விரதம்
பிரசமத்திய (அ) கிரிச்சா விரதம்
அதிகிரிச்சா விரதம்
பராக விரதம்
தப்த கிரிச்சா விரதம்
பதகிரிச்ச விரதம்
சாந்தாராயன விரதம்

என்று விரதங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, அதேபோன்று இந்த விரதங்கள் கடைபிடிக்கும் முறைகளும் உள்ளன. 27 வகையான முறைகள் உள்ளன அவற்றையும் பார்ப்போம்.

### விரதங்களின் வகைகள்

- ❖ உமிழ்நீரைக் கூட விழுங்காமல் இருப்பது. இதை யோகிகள் மட்டுமே கடைப்பிடிப் பார்களாம்.
- ❖ தேன் அல்லது இளநீர் ஆகியவற்றில் ஏதா வது ஒன்றை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- ❖ பசுவின் பாலை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- ❖ எந்த உணவுமில்லாமல் தொடர்ந்து பன்னி ரண்டு நாட்கள் நீரை மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- ❖ காலை நேரம் மட்டும் உணவருந்தி உப வாசம் இருத்தல்.
- ❖ பகல் நேர உணவை மட்டும் சாப்பிட்டு உப வாசம் இருத்தல்.
- ❖ இரவு நேர உணவை மட்டும் சாப்பிட்டு உப வாசம் இருத்தல்.
- ❖ மூன்று நாட்கள்தொடர்ந்து காலை நேர உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ மூன்று நாட்கள்தொடர்ந்து மதிய நேர உண வை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ மூன்று நாட்கள்தொடர்ந்து இரவு நேர உண வை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ கடுமையான விரதங்களுக்கு 21 நாட்கள் வெறும் பசும்பால் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- ❖ மூன்று நாட்கள் பகல் ஒருவேளை மூன்று கைப்பிடி உணவை மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ இரவில் மட்டும் மூன்று கைப்பிடி அளவு உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத் தல்.
- ❖ ஒருநாள் பகல் நேரத்தில் சுத்தமான எள்ளுப் புண்ணாக்கு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ ஒருநாள் இரவில் மட்டும் பசுவின் பால் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ ஒரு நாள் மோரை மட்டும் அருந்தி உப வாசம் இருத்தல்.
- ❖ ஒரு நாள் முழுவதும் சுத்தமான நீரை மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.
- ❖ ஒரு நாள் முழுவதும் பொரிமாவு (புழுங்கல் அரிசியை வறுத்து நன்கு பொடித்து நெய், தேங்காய், சர்க்கரை ஆகியவற்றைப் போட் டுப் பிசைந்து வைத்திருப்பது) மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ ஒரு நாள் முழுவதும் திணை மாவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- ❖ தேய்பிறை அன்று ஆரம்பித்து வளர்பிறை முடிந்து திரும்பத் தேய்பிறை நாட்கள்



www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

வரை தினம் ஒருபிடி அன்னத்தை மட்டும் சாப்பிட்டு பின்னர் தினம் ஒவ்வொரு பிடி அன்னத்தை அதிகமாக்கிக் கொண்டு சுக்கிலபட்சம் முடிந்த பிறகு திரும்ப ஒவ்வொரு பிடி அன்னமாகக் குறைப்பது என உபவாசம் இருத்தல்.

- ஒரு நாள் முழுவதும் வில்வ தழையையும் நீரையும் மட்டுமே அருந்தி உபவாசம் இருத்தல்.
- ஒரு நாள் முழுவதும் அரச இலைத் தளிர்களையும், நீரையும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- ஒரு நாள் முழுவதும் அத்தி இளந்தளிர்களையும், நீரையும் மட்டும் அருந்தி உபவாசம் இருத்தல்.
- இரு வேளை உணவுடன் உபவாசம் இருத்தல்.
- முதல் நாள் ஒரு வேளை பகல் உணவு மட்டும், மறுநாள் இரவு மட்டும் உணவுடன் உபவாசம் இருத்தல்.
- மாமிச உணவுகள், மசாலாக்கள் இல்லாத சைவ உணவுகளை மட்டுமே குறைந்த அளவு சாப்பிட்டு உபவாசம் இருத்தல்.
- வாழைக்காய், பூண்டு, வெங்காயம், பெருங்காயம் ஆகியவை சேர்ந்த உணவுகளை மட்டும் சேர்த்துக் கொள்ளாமல் உபவாசம் இருத்தல்.

**இந்த உபவாச விரதங்களில் எதைக் கடைப் பிடித்தால் நல்லது என்கிறீர்களா?**

முதலில் உடல் நலனை காக்க உதவும்விரதங்களை கடைப்பிடித்து, படிப்படியாக இறை நிலையை அடைய, நமது உள் உறுப்புகளை தயார்படுத்த வேண்டி மற்ற விரதங்கள் ஒவ்வொன்றையும் கடைப் பிடிப்பதே சிறந்தது. ஆரம்பத்திலேயே பெரிய நிலையில் உள்ள விரத முறையை கடைபிடித்தால், அதற்கு உடலும் மனமும் ஒத்துழைக்காது ஆகவே வாரத்தின் மூன்று நாட்கள் காலை6 மணி முதல் மாலை 6மணிவரைஉள்ள விரதத்தை கடைப் பிடிப்பதே சிறந்தது.





# ருத்ரணி

கோவில்கள் மற்றும் வீடுகளில் பூஜையின் போது இறைவனுக்கு ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அதில் பாம்பு தலையுடன் கூடிய ஒரு டீயூஸ்பூன் அமைப்புள்ள பொருளை பயன்படுத்துவார்கள். இதை பெரும்பாலானோர் உத்தரணி என்று அழைப்பார்கள்.

ஆனால் உண்மையில் இதனை ருத்ரணி என்று சொல்லவேண்டும். பஞ்ச என்றால் ஐந்து என்று மட்டுமல்ல, அகலமான என்ற பொருளும் உண்டு. பஞ்ச பாத்திரம் என்றால் ‘வாய் அகன்ற பாத்திரம்’ என்று பொருள். நீங்கள் நினைப்பது போல் ஐந்து பாத்திரங்களோ அல்லது ஐந்து விதமான உலோகங்களின் கலவையோ அல்ல. அதேபோல அதனுடன் இணையாக இருக்கும் சின்னஞ்சிறு கரண்டிக்கு ருத்ரணி என்று பெயர். ருத்ரனின் அணிகலனான பாம்பின் உருவினைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கும். பாற்கடலை பாம்பைக் கயிறாகக் கொண்டு கடைந்துதானே அமிர்தத்தை எடுத்தார்கள்!

அதுபோல பஞ்சபாத்திரத்தில் உள்ள தீர்த்தத்தை எடுக்கும்போது அது அமிர்தமாகவேண்டும் என்பதால் பாம்பின் உருவில் அதனை வடிவமைத்தார்கள். பஞ்சபாத்திரம் ருத்ரணி என்பதே சரி. இறைவனை முறைப்படி பூஜை செய்து வழிபடும்போது, முதலில் அந்த தெய்வத்தின் பெயரைச் சொல்லி தியானிப்பார்கள்.

உதாரணத்திற்கு பிள்ளையார் பூஜை செய்யும்போது

‘விநாயகாய நமஹ: த்யாயாமி’ (விநாயகப் பெருமானே உம்மை தியானிக்கிறேன்),

‘ஆவாஹயாமி’ (ஆவாஹனம் செய்கிறேன்),

‘ஆஸனம் சமர்ப்பயாமி’ (உட்காருவதற்கு ஆசனம் அளிக்கிறேன்) என்று சொல்லி அழைப்பார்கள்.

விநாயகப் பெருமான் வந்து ஆசனத்தில் அமர்ந்துவிட்டதாக எண்ணி அடுத்து, பஞ்ச உபசாரம் என்ற பூஜைகளைச் செய்வார்கள். அதாவது ஒரு விருந்தினர் நம் வீட்டிற்குள் வந்தவுடன் அவர்களை ‘வாருங்கள், வாருங்கள்’ என்று வரவேற்று, ‘உட்காருங்கள், தண்ணீர் குடியுங்கள்,’ என்று முதலில் உபசாரம் செய்வோம் அல்லவா, அதேபோல இறைவன் நம் வீட்டிற்குள் வந்தவுடன் அவருக்கு பாதபூஜை செய்யும் விதமாக

‘பாதயோ: பாத்யம் சமர்ப்பயாமி’ (உம்முடைய பாதத்தில் தீர்த்தம் விட்டு அலம்புகிறேன்), ‘

ஹஸ்தயோ: அர்க்யம் சமர்ப்பயாமி’ (கைகளை அலம்பிக்கொள்ள தீர்த்தம் விடுகிறேன்),

‘முகே ஆசமனீயம் சமர்ப்பயாமி’ (முகம் வாய் அலம்ப தீர்த்தம் தருகிறேன்),

‘சுத்தோதக ஸ்நானம் சமர்ப்பயாமி’ (நீராட சுத்தமான தண்ணீரை விடுகிறேன்),

‘ஸ்நான அனந்தரம் ஆசமனீயம் சமர்ப்பயாமி’ (இறுதியாக மீண்டும் ஜலம் விடுகிறேன்)

என்று ஐந்து முறை ருத்ரணியினால் தீர்த்தம் விடுவார்கள்.

இந்த ஐந்து விதமான பஞ்ச உபசாரத்தினைச் செய்வதற்கு துணையாக இந்த பாத்திரம் பயன்படுவதால் ஐந்து என்ற அர்த்தத்தோடு இதனை பஞ்சபாத்திரம் என்று அழைப்பதாகவும் கொள்ளலாம்.




ஆன்மிகமலர் மெயில் புக்
www.aanmeegamalar.com

# மந்திரங்களும் அதன் பலன்களும்

மந்திரங்கள் பிரபஞ்சத்தில் உள்ள தெய்வ சக்தியின் அதிர்வலை குறியீடுகள், ஒவ்வொரு வகை தெய்வ சக்திக்கும் ஒவ்வொரு அதிர் வலைகள் உண்டு,

எஃப் எம் ரேடியோவில் ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒவ்வொரும் "ஃப்ரீக்வன்ஸி" இருப்பது போல் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு தெய்வ சக்திக்கும் ஒவ்வொரு அதிர்வு உண்டு.

ஒவ்வொரு சமஸ்க்ருத எழுத்தும் ஒரு தேவதையை (சக்தி நிலையை) குறிக்கிறது. மந்திரங்களை உச்சரிக்கும் போது அதற்குரிய பிரபஞ்ச அதிர்வலைகள் நவகிரகங்கள் மூலமாக பூமியில் வந்து நமது சுவாசத்தின் வழியாக சூட்சும உடலில் சேர்ந்து பின் ஸ்தூல உடலில் செயல்படுகிறது.

இந்த பிரபஞ்ச அதிர்வலைகள் ஒருவர்செய்யும் கர்மங்களுக்கு (செயல்) ஏற்ப உடலில் கூடும் குறையும், இவை அதிகமாக இருக்கும் போது வாழ்வின் நல்ல பகுதிகளான ஆரோக்கியம், அமைதி, ஆனந்தம் செல்வம் என்பன இருக்கும். இந்த அதிர்வலைகளை மனித மனம் ஈர்த்து சேமித்து அதன் மூலம் நன்மை அடைவதற்காக ரிஷிகள் வகுத்து வைத்த வழியே மந்திரங்கள்.

### தமிழ் மந்திரம்:

ஆதி தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் சுருக்கமான ஆனால் ஆழமான பொருள் தரும் சூத்திரத்தினை முன்மொழிகிறது.

“நிறைமொழி மாந்தர் ஆணையிற்
கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப”
(சொல்லதிகாரம், 480).

"நிறைமொழி மாந்தர்" என்பதை சைவ சித்தாந்த வார்த்தையில் விளக்குவதானால்

சிவத்துடன் இரண்டறக்கலந்தவர்கள், வேதாந்த மொழியில் சொல்வதானால் பிரம்மத்துடன் கலந்தவர்கள். இவர்களே நிறைமொழி மாந்தர் எனப்படுவர்.

இவர்கள் சொல்லும் மொழி எல்லாம் மந்திரங்கள் எனப்படும். இதன் படி ரிஷிகள், சித்தர்களின் வாக்குகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோரின் பாடல்கள், ஸ்தோத்திரங்கள் ஆகியவை எல்லாமே மந்திரம் என்று கூறலாம்.

இயற்பியலில் (Physics) ஒலி அலை அதிர்வு (resonance) பற்றி நீங்கள் ஒருவேளை அறிந்திருக்கலாம். ஒரு பகுதியின் இயற்கை அதிர்வுடன் அதே அளவான அதிர்வுகள் பரிவுறும் போது சக்தி கடத்தப்படும், இதேகோட்பாடுதான் மந்திர சாதனையிலும் நிகழ்கிறது.

ஒரு மந்திரம் பிரபஞ்ச சக்தியின் இயற்கை அதிர்வினை ஒத்து நம் மனதிற்குள் ஒரு அதிர்வினை உருவாக்கி சக்தியினை பெற்றுக் கொள்ளும். மந்திரங்களை உச்சரிக்கும் போதும் அது தான் நடக்கிறது.

மந்திரத்தை உடலாக பாவித்து பார்த்தால் அதன் தலை போன்றது “ஓம்" என்ற பிரணவம், தலை அல்லது மூளை இல்லாமல் எந்தவொரு செயலும் உடலில் நடைபெறாது என்பது போல், எல்லா மந்திரத்திற்கு முன்னும் ஓம் சேர்க்க வேண்டும்.

ஓங்காரத்தை தொடர்ந்து அந்த மந்திரத்திற்குரிய தேவதை ஸ்ரீ என்பதுடன் தொடங்கும், உதாரணமாக ஓம் கணபதி! என்றவாறு, இருக்கும். அத்துடன் சில சக்தியலைகளை ஈர்க்க பீஜட்சரங்களும் சேர்ந்து வரும். மந்திரத்தின் கடைசிப்பகுதி பல்லவம் எனப்படும், அதாவது முடிவுப்பகுதி, இந்த பகுதி ஏழு வகைப்படும்.

### 1. நமஹ:

ந என்றால் இல்லை என்று பொருள். ம என்றால் நான் என்பதாகும். நமஹ என்பது "நான் இல்லை" என்று பொருள்படும். அதாவது அனைத்துமே வணங்கப்படும் அந்த தெய்வ சக்திக்கே அர்ப்பணம் என்றும் நான் என்று எதுவும் இல்லை என்பதாகும். இந்த வகையில் நாம் மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் என்கிற நான்கையும் வணங்கும் தெய்வ சக்தியுடன் ஒன்றாக்குகிறோம். நாம் நமஹ எனும் போது நம் மனம், புத்தி, அஹங்காரம் மற்றும் சித்தம் ஆகியவை விழிப்படைந்து அந்த குறிப்பிட்ட தெய்வ சக்தியினை ஈர்த்து அதுவாகவே ஆகிறது. உதாரணத்திற்கு "ஓம் கணேசாய நமஹ" என்றால் கணேசரின் சக்தி மேற்சொன்ன




www.aanmeegamalar.com


www.aanmeegamalar.com

நான்கிலும் மெல்ல மெல்ல பதியத்தொடங்கும்.

## 2. ஸ்வாஹா:

இது அக்னியிற்கு அர்ப்பணிக்கும் மந்திர முடிவு, இதன் மூலம் மந்திர சக்தி அக்னியில் சேர்க்கப்படுகிறது, அதாவது பஞ்ச பூத அக்னி தத்துவத்தில் மந்திரம் கலந்து பிரபஞ்ச சக்தியினை செயற்படுத்த தொடங்குகிறது. பொதுவாக இப்படியான முடிவுள்ள மந்திரங்கள் ஜெபிக்கும் போது அருகில் விளக்கு, அல்லது ஊதுபத்தி போன்ற அக்னி ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும்.

## 3. ஸ்வதா:

ஸ்வாஹா என்பது பிரபஞ்சத்தில் சக்தியினை செயற்படுத்தும் அமைப்பு என்றால், ஸ்வதா என்பது அகப்பிரபஞ்சத்தில் உள்ள சக்தியினை செயற்படுத்தும் மந்திர முடிவாகும். பொதுவாக ஸ்வதா என்ற முடிவுடன் மந்திரத்தினை ஜெபித்து அக்னியில் சேர்க்கும் போது அவரவர் முன்னோர்களுக்கு அந்த தெய்வ சக்தி சேரும்.



## 4. வஷட்:

தீய சக்தியினை அழிக்கும் தெய்வசக்தியாக மந்திரம் மாறி பயன்தரும்.

## 5. வௌஷட்:

இது எதிர் சக்திகளை குழப்பி சாதகனிற்கு அமைவாக மாற்றும்.

## 6. ஹும்:

இது எதிரிகள் மேல் கோபசக்தியினை உருவாக்கும்.

## 7. பட்:

சாதகனுக்கு எதிரான சக்தியினை விரட்டும்.

இது போலவே ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஏழு பண்புகள் இருக்கும். அவை

1. அம்மந்திரத்தை வெளிக்கொணர்ந்த ரிஷி.
2. மந்திரத்தை எப்படி உச்சரிக்க வேண்டும் எனும் சந்தஸ்.
3. அந்த மந்திரத்தின் தேவதை.
4. அதன் மூல சக்தியான பீஜம்.
5. அதன் சக்தி.
6. இனைக்கும் பகுதியான கீலகம்.
7. நம் உடலின் பகுதிகளை ஒழுங்குபடுத்தும் நியாசம் ஆகியன.

நமது உடலானது பல நாடிகளால் ஆனது. நாடிகளை வசப்படுத்தினால் எதுவும் சாத்திய மாகுமாம். சப்த சலனமாய் உச்சரிக்கும் மந்திர ஒலிகள் இந்த நாடிகளைத் தூண்டி உச்சரிப்பவர் மற் றும் கேட்பவரிடம் சலனத்தை உண்டாக்கும் என்கிறார்கள்.

மந்திரங்களை உச்சரிக்கும்போது அந்தந்த பீஜங்களுக்கான உடல் உறுப்பின்மீது சித் தத்தை நிறுத்தி தொடர்ந்து கூற அந்த மந்திரங்களுக்கான பலனை பெறலாமாம். 'பதஞ்சலி யோக சூத்திரம்' என்கிற நூலில் மந் திரத்தின் பொருள் தெரியாமல் எத்தனை முறை உச்சரித்தாலும் பயனில்லை என கூறுகிறது.





ஆன்மிகமலர் மெயில் புக்



மாதம் தோறும் இரண்டு இதழ்களாக (இ-புக் வடிவில்) வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும் இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள் படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

# ஒரே கோவில் மூன்று தெய்வங்கள்

## வக்கிர கிரக தோஷம் போக்கும் வக்ரகாளி

தொண்டை நாட்டிலுள்ள 32 சிவத்தலங்களுள் 30-வது தலமாகவும் 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதும் சமயக்குறவர் நால்வரில் பார்வதி தேவியிடம் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தரால் பாடல்பெற்ற சிறப்புடைய திருத்தலமாக விளங்குகிறது திருவக்கரை ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் மற்றும் வக்கிரகாளியம்மன் கோயில்.

விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டம் திருவக்கரை கிராமத்தில் வராக நதி என்றழைக்கப்படும் சங்கராபரணி ஆற்றின் வடகரையில் ஏழு நிலை ராஜகோபுரத்துடன் 10 ஏக்கர் நிலப்பரப்பளவில் அமைந்துள்ளது.

ஆதித்யசோழன் என்னும் சோழ மன்னன் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இக்கோயிலை கட்டி உள்ளான்.

இங்கு இறைவன் சந்திரமௌலீஸ்வரர் கிழக்கு நோக்கி மூன்றுமுக லிங்கமாக அருள் பாலிக்கிறார். இது எங்கும் காணமுடியாத காட்சி.

ராஜகோபுர வழியாக நுழைந்தவுடன் வக்கிரகாளியம்மன் வடக்கு நோக்கி அருள் பாலிக்கிறார். பொதுவாக காளிகோயில் ஊரின் எல்லையில்தான் இருக்கும். ஆனால் ஊரின் நடுவே ராஜகோபுரத்தின் நுழைவு வாயிலின் அருகே வக்கிரகாளியம்மன் அமைந்துள்ளது இங்கு மட்டும்தான்.

காளி கோயிலுக்கு எதிரில் (வடக்குப் புறத்தில்) ஆத்ம லிங்கம் கோயில். கண்ட லிங்கம் (வக்கிராசுரன் தன் கண்டத்தில்/ தொண்டையில் வைத்துப் பூஜித்ததால்) என்றும் வக்கிர லிங்கம் என்றும் பெயர் களுண்டு. மேற்கு நோக்கிய லிங்கம்.

ஆத்ம லிங்கத்துக்கு ஒரு தனிச் சிறப்பு இருப்பதாகக் கோயிலைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். கோடை காலத்தில், லிங்கம் படுகுளிர்ச்சியாக இருக்குமாம். குளிர் காலத்திலோ, லிங்கத்தின் மீது, முத்து முத்தாக நீர்த் துளிகள் காணப்படுமாம்.

வக்கிராசூரன் என்னும் அரக்கன் சிவபெருமானை தனது கண்டத்தில் வைத்து பூஜை செய்தான். தனது தவ வலிமையினால் தன் முன் தோன்றிய சிவபெருமானிடம் சாகா வரம் பெற்றான். தான் பெற்ற வரத்தைகொண்டு தேவர் முதலானவர்களை கொடுமை செய்து வந்தான்.

அவன் செய்த கொடுமைகளை தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவபெருமான் வைகுண்ட வாசனான மகாவிஷ்ணுவை அழைத்து வக்கிராசூரனை வதம் செய்யும்படி கூறினார்.

அவரும் சிவபெருமானின் வார்த்தையை கேட்டு மகாவிஷ்ணு வக்கிராசூரனிடம்போரிட்டு தனது ஸ்ரீசக்கரத்தை பிரயோகம் செய்து அரக்கனை அழித்தார்.

இங்கு மகாவிஷ்ணு வரதராஜபெருமாளாக கோயிலின் பின்புறத்தில் மேற்கு நோக்கி சங்கு சக்கரத்துடன் ஆறடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சி கொடுக்கிறார்.

வக்கிராசூரன் மறைவுக்கு பிறகு அவனின் தங்கையான துன்முகி தன் சகோதரனைப் போலவேகொடுஞ் செயல் புரிந்து வந்தாள். அவளை வதம் செய்யும்படி சிவபெருமான் பார்வதியிடம் கூற பார்வதிதேவியும் அரக்கி துன்முகியை வதம்செய்ய சென்றார்.

அப்பொழுது துன்முகி கருவுற்றிருந்தாள். சாஸ்திர முறைப்படி கர்ப்பிணியையோ, சிசுவையோ வதம் செய்யக்கூடாது.

எனவே அகிலாண்ட நாயகியான பார்வதி தேவி துன்முகியின் வயிற்றைக்கிழித்து அவள் வயிற்றிலிருந்த சிசுவை தனது வலது காதில் குண்டலமாக அணிந்துகொண்டு, பின்பு அரக்கியான துன்முகியை வதம் செய்தாள்.

வக்கிராசூரனின் தங்கையை அழித்ததனால் வக்கிர காளியாக அங்கேயே அமர்ந்துவிட்டாள். அவள் பெயராலேயே





இந்த ஊர் திருவக்கரை என்று அழைக்கப் படுகிறது.

**தோஷம் நீக்கும் பிரார்த்தனை:**

வக்கிரமாக அமையப்பெற்ற கிரகங்களால் பல்வேறு பாதிப்புக்கு ஆளானவர்கள் இத் தலத்தில் வக்கிரமாக அமையப்பெற்ற தெய் வங்களை வழிபட்டு, வக்கிரமான கட்டுப்பட்டுள்ள இக்கோயிலை வலம் வந்தால் துன்பங்கள் நீங்க பெற்று வளமான வாழ்வு பெறுவார்கள். இது வக்கிரதோஷ நிவர்த்தி தலமாகும்.

**திருமண தோஷம்:**

திருமணமாகாதவர்கள், பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் இந்த கோயிலில் உள்ள துர்க்கை அம்மனை செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இராகு காலத்தில் பூஜை செய்துவந்தால் குறைகள் நீங்கும்.

நினைத்த காரியம் கைகூடபௌர்ணமி தினத்தன்று வக்கிரகாளியம்மனை தொடர்ந்து 3 மாதம் பௌர்ணமி நாளில் தரிசனம் செய்து வந்தால் எண்ணிய காரியம் கைகூடும். அதனாலேயே பௌர்ணமி அன்று இரவு 12.00 மணிக்கு நடைபெறும் ஜோதி தரிசனத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

தமிழகம், புதுச்சேரி மட்டுமல்லாது கர்நாடகம், கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இந்த திருக்கோயிலில் தனியாக அமைந் துள்ள தீபலட்சுமியின் கோயிலில் நீண்ட நாட் களாக திருமணம் ஆகாதவர்கள் இராகு காலத்தில் விளக்கேற்றி அம்மனை கும்பிட்டு, மாங்கல்யம் கட்டி பிரார்த்தனை செய்தால் திருமணம் விரைவில் நடக்கும் என்பது ஐதீகம்.

இந்த அண்டசராசரத்தில் சுழன்றுகொண்டிருக் கிற ஒன்பது கிரகங்களுக்கும் ஒவ்வொரு அதிதேவதை உண்டு. அதன்படி ராகு, கேது இரண்டிற்கும் அதிதேவதை காளி. எனவே இந்தகோயிலை வலம் வர நினைப்பவர்கள் வலதுபக்கமாக 5 முறையும், இடது பக்க மாக 4 முறையும் வலம் வந்து தொழுது வணங்கவேண்டும். திருவக்கரையில், சனி பகவான் வக்கிரச் சனியாகக் காட்சி தருகிறார்.

வாகனத்தோடு கூடிய சனியைப் பார்த்தால் புரியும். பிற இடங்களில், காக்கை வாகனத்தின் தலை. சனிக்கு வலது பக்கம் இருக்கும். இங்கே, காக்கையின் தலை, சனிக்கு இடப் பக்கம் உள்ளது. சனி தோஷத்தின் தீவிரம் உள்ளவர்கள் இங்குள்ள சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபட்டால் பலன் கிடைக்கும்.

மேலும் தகவல்களுக்கு

கோவில் தொலைபேசி எண்: 09443536652



# முகலிங்க தரிசனப் பலன்கள்



பூஜைக்கு உரிய லிங்க வகைகள், ஆறு வகைகளைத் திருமூலர் தம்முடைய திருமந் திரத்தின் ஏழாவது தந்திரத்தில் குறிப்பிடுவார்

ஆண்ட லிங்கம்,

பிண்ட லிங்கம்,

சதாசிவ லிங்கம்

ஞான லிங்கம்,

ஆத்ம லிங்கம்,

சிவலிங்கம்

என்று கூறுவார்.

சிவ தத்துவத்துக்கு மூன்று நிலை உண்டு.

1. அருவமான (உருவமில்லாத நிலை,
2. அருவுருமான நிலை (பாதி உருவம் பாதி அருவம்),
3. உருவமான நிலை.

எந்தக் குறிப்பிட்ட உருவமும் இல்லாமல் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துள்ள பரம் பொருள், மனித இனத்துக்காக, மனிதர்களுக்குப் புரியக் கூடிய வகையில் உருவம் தாங்கி இறங்கி வருகிற தன்மையைத்தான் இந்த மூன்று நிலைகளும் காட்டும்.

அருவமான நிலை, நிர்க்குண பிரம்மமாகும். அதாவது, குணம், பண்போ தனித்துக் கூற முடியாத நிலை.

உருவமான நிலை, சகுண பிரம்மமாகும். அதாவது உருவம், நிறம், தன்மை என்று விளக்கப்படக் கூடிய நிலை. சிவ மூர்த்தங்கள் நடராஜர், பிட்சாடனர், கால சம்ஹாரர், ரிஷபாரூடர், சோமாஸ்கந்தர் போன்ற திருமேனிகள் உருவ நிலைக்கான எடுத்துக்காட்டுகளும்.

அருவமும் இல்லாமல் உருவமும் இல்லாமல் (அருவமாக இருப்பது போல ஆனால், ஏதோவொரு உருவமும் உண்டு), ஆனால் இரண்டுமாக இருக்கிற நிலையே, சிவலிங்க நிலையாகும். அருவத்திலிருந்து அருவுருவம், அருவுருவத்திலிருந்து உருவம் என்று வரிசை யாக வெளிப்பட்டுத் தோன்றுவதற்கு, அதிகார பரிணாமம் என்று காஷ்மீர சைவம் பெயர் சூட்டு கிறது. சிவலிங்கத்திலிருந்து சிவ மூர்த்தம் தோன்றுகிற வழியில், இடைப்பட்ட நிலையே முகலிங்கம்.

இந்த லிங்க வகைகள் பெரும்பாலும் வட இந்தியால் அதிகம் உள்ளது.தமிழகத்தில் வக்ரகாளியம்மன் கோவில், திருவண்ணா மலையில் ஒரு சன்னதி என குறைந்த அளவில் மட்டுமே உள்ளது. (வக்ரகாளியம்மன் தொடர்பான செய்தி 14ம் பக்கத்தில் உள்ளது). இந்த லிங்க தரிசனம் என்பது சிவனின் மூன்று நிலை தரிசனத்தையும் கண்ட பலன் கிடைக்கும்.

# சபரிமலையில் ஐயப்பன் குளித்த இடம்



வருடந்தோறும் கார்த்திகை மார்கழி மாதம் ஐயப்பனுக்கு உரிய மாதங்களாகும், இந்த மாதங்கள் புத்துணர்ச்சி மாதங்களாகவும் விளங்குகிறது.

ஐயப்பன் விரத முறையை கடைபிடிக்கும் ஒவ்வொருவரும் குளிர் நிரம்பிய இந்த இரண்டு மாதங்களிலும் மிகுந்த சுறுசுறுப்புடன் காணப் படுவார்கள்.

விரதமிருந்து மலை ஏறி ஐயப்பனை காணும் போது கிடைக்கும் மகிழ்ச்சி எண்ணிலடங்காதது, வருடத்தின் குறிப்பிட்ட நாட்கள் மட்டுமே ஐயப்பன் நினைவு வருவதால், அவர் சம்பந்தப்பட்ட அநேக செய்திகளை அறிய முடியவில்லை.

இதைப் பயன்படுத்தி பல்வேறு கட்டுக்கதைகள், புராணத்தின் இடைச்செருகல்கள் போன்றவை ஐயப்பன் கதையில் ஏராளமாக உட்புகுத்தப்பட்டுவிட்டது. இதில் குறிப்பாக வாபர் தரிசனம், போன்றவை வெறும் கட்டுக்கதைகள் தான், ஆனால் சபரிமலையைச் சுற்றி பல்வேறு சுவாரஸ்யங்கள் இருக்கின்றன.

சபரிமலையில் ஐயப்பன் பம்பை நதி, பஸ்ம குளம் போன்றவற்றில் நீராடியதாக வரலாறு இருக்கிறது. இதனால் சபரிமலை செல்லும் பக்தர்கள் இந்த இரண்டு இடங்களிலும் நீராடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அதே சமயம் சபரிமலை கோவிலிலிருந்து இரண்டு கிலோ மீட்டருக்குள் ஒரு சிறு தீர்த்தம் உள்ளது. இந்த தீர்த்தத்தில், ஐயப்பன் யோக நிலையில் குளித்துள்ளார், இதற்கு ஆதாரமாக அந்த தீர்த்தம் விழும் பகுதியில் ஒரு நபர் யோக நிலையில் அமரும் வகையில் பாறை குடையப்பட்டிருக்கும், யோக நிலையில் இந்த உரல் குழியில் ஒருவர் அமரும் அளவிற்கு உள்ளது.

யோக நிலையில் இந்த குழியில் அமர்ந்தால், அருவி கொட்டுவதைப் போன்று சிறிய அளவில் தண்ணீர் தலையில் கொட்டுகிறது. இந்த யோக நிலையில் ஐயப்பன் இங்கு தியானம் செய்துள்ளார்.

பெரும்பாலும் இந்த இடத்திற்கு அனுமதி கிடையாது. முழுவதும் வனத் திற்குள் இருப்பதால் யாரையும் அனுமதிப்பதில்லை, அதுவும் கொடிய விலங்குகளான புலி, யானை, சங்கம், பாம்புகள் போன்றவை சர்வ சாதாரணமாக இங்கு நடமாடும் என்பதால் வனத்துறையினர் யாரையும் அனுமதிப்பதில்லை.

இந்த தீர்த்தத்திலிருந்து விழும் நீரை குடிக்க மேற்கண்ட விலங்குகள் எந்நேரமும் அங்கு வரும் என்பதால், அவற்றிற்கு இடையூறு செய்யக்கூடாது, விலங்குகளால் பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதால் இந்த இடத்திற்கு யாரையும் வனத்துறையினர் அனுமதிப்ப தில்லை.

படத்தில் உள்ளது சில வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் கேரள வனத்துறையினரிடம் சிறப்பு அனுமதிபெற்று அவர்களுடன் சென்று இந்த தீர்த்தத்தில் நீராடிவிட்டு வரலாம்.



## உரல்குழி தீர்த்தம்





இதுபோன்று ஏறித்தான் உரல்குழி தீர்த்தத்திற்கு செல்லவேண்டும்.





உரல்குழி தீர்த்தத்தில் ஒரு நபர் மட்டுமே இறங்க முடியும்



யோக நிலையில் ஒரு நபர் அமரும் வகையில் உள்ள உரல் குழி தீர்த்தம்

www.aanmeegamalar.com

# 100 மருத்துவருக்குரிய பலன்களைத் தரும் இஞ்சி



நோய்களை நீக்குவதில் இஞ்சி மிகப்பெரிய மருத்துவராக சமையலறையில் திகழ்கிறது.

இஞ்சியை மிஞ்சிய மருந்து உலகில் வேறு ஏதும் இல்லை

கால் கிலோ இஞ்சியில் நூறு டாக்டர்களின் ஆற்றல் உள்ளது.

1. இஞ்சி சாறை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.
2. இஞ்சி துவையல், பச்சடி வைத்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி தீரும்.
3. இஞ்சியை சுட்டு சிறிது உப்பில் தோய்த்து சாப்பிட பித்த, கப நோய்கள் தீரும்.
4. இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.
5. இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீர ணம், வாய் நாற்றம் தீரும். சுறு சுறுப்பு ஏற்படும்.
6. இஞ்சியை, துவையலாக்கி சாப்பிட வயிற்று உப்புசம் இரைச்சல் தீரும்.
7. காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச் சுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.
8. பத்துகிராம் இஞ்சி, பூண்டு இரண்டையும் அரைத்து, ஒருகப் வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட்கள் சாப்பிட மார்பு வலி தீரும்.
9. இஞ்சிசாறோடு, தேன் கலந்து சூடாக்கி காலையில் வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்து வர தொந்தி கரைந்து விடும்.
10. இஞ்சி சாறில், எலுமிச்சை சாறு கலந்து சாப்பிட நல்ல பசி ஏற்படும்.
11. இஞ்சி, மிளகு, இரண்டையும் அரைத்து சாப்பிட ஜீரணம் ஏற்படும்.
12. இஞ்சியை வதக்கி, தேன் விட்டு கிளறி, நீர் விட்டு, கொதிக்க வைத்து நீரை காலை, மாலை குடித்துவர வயிற் றுப் போக்கு தீரும்.
13. இஞ்சியை அரைத்து நீரில் கலந்து தெளிந்தபின், நீரை எடுத்து, துளசி இலை சாறை சேர்த்து ஒரு கரண்டி வீதம் ஒரு வாரம் சாப்பிட வாய்வுத் தொல்லை நீங்கும்.
14. இஞ்சி சாறில், தேன் கலந்து தினசரி காலை ஒரு கரண்டி சாப்பிட்டு வர நோய் தடுப்பு திறன் கூடும். உற்சாகம் ஏற்படும். இளமை பெருகும்.
15. இஞ்சி சாறுடன், வெங்காய சாறு கலந்து ஒரு வாரம், காலையில் ஒரு கரண்டி வீதம் குடித்துவர நீரிழிவு குறையும்.
16. இஞ்சி சாறு, எலுமிச்சை சாறு, வெங் காய சாறு மூன்றையும் கலந்து ஒருவேளை அரை அவுன்ஸ் வீதம் சாப்பிட்டுவர ஆரம்ப கால ஆஸ்துமா, இரைப்பு, இருமல் குணமாகும்.



ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# அவதாரமும் உற்பத்தியும்

**73 பாகம்**

**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**

**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

பெரிய மகான்களையும் சிறந்த யோகிகளையும் ஈன்றெடுத்த நம் பாரதம் ஆன்மீகத்தில் முன்னணியிலுள்ளது. அதனால் சிறந்த குருமார்கள் மற்றும் யோகிகளால் நிறைந்து ஒளிர்கிறது பாரதம். எது இல்லையென்றாலும் ஆன்மீகத்திற்குப் பஞ்சம் இல்லாத இந்தத் திருநாட்டில் பிறப்பதே சிறப்புதான். அதனால் நமது பாரதத் தாயை வணங்கித் தோள்தட்டி பெருமைப்படலாம். அவ்வாறான நம் பாரத நாட்டில் யோகிகள் பலர் சிறந்து விளங்குகின்றனர்.

அவதாரம்.

மனித வாழ்விற்குச் சிறந்த பயனுடைய நூலாகிய ‘ஒரு யோகியின் சுயசரிதம்’ எழுதி அருளிய குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர், 1893ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி வடகிழக்கு இந்திய ாவில் இமயமலைக்கு அருகிலுள்ள கோரக்பூரில் அவதரித்தார். அவருடைய தாயார் ‘ஞானபிரபா கோஷ்’. தந்தை ‘பகவதி சரண் கோஷ்’. வங்காளியரான இவர்கள் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். தாயார் அன்பின் அரசியாகவும் கனிவு உள்ளம் கொண்டவராகவும் இருந்தார். தந்தை ஆழ்ந்த சிந்தனை உடையவராகவும் கண்டிப்புடையவராகவும் இருந்தார். இவர்கள் இருவரும் மகாவதார பாபாஜியின் பிரதான சீடரான லாஹிரி மகாசயரின் சிஷ்யர்களாவர்.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் பாரதநாட்டில் சிறந்து விளங்கும் யோகிகளில் ஒருவராவார். இந்தக் காலக்கட்டத்தில் அவர் விலைமதிப்பற்ற கிரியா யோக விஞ்ஞானத்தை இறைவனின் அருளுடனும் உதவியுடனும் நமக்கு அளித்திருக்கிறார். மனிதனுள் இருக்கும் தெய்வீக ஆற்றலைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த உன்னதமகான்களுக்கும் அவர்களில் ஒருவரான ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தருக்கும் நாம் அனைவரும் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

பாரதம் இன்று பரமஹம்ஸயோகானந்தர் மூலமாக எதை அளித்திருக்கின்றதோ, அதன் மதிப்பு ஈடு இணையற்றது.மனிதனின் ஆத்மாவை மேம்படுத்திக் கொள்வதற்கான ஓர் ஆன்மீக உத்திதான் ‘கிரியாயோகம்’ இந்த பழமையான விஞ்ஞானத்தை நமக்காக இக்கால கட்டத்தில் குருதேவர் அருளி வழங்கியிருக்கிறார். இவ்வுலக மக்களுக்காக இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட ஒரு மகாபுருஷரான குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர், ‘ஜகத் குரு’ ஆவார்.

பரமஹம்ஸ யோகானந்தர் மகாவதார பாபாஜியின் வம்ச பரம்பரையில் அவதரித்துள்ளார். லாஹிரி மகாசயரின் சீடரான ஸ்வாமி ஸ்ரீயுக்தேஸ்வர் கிரியை அவர் தனது குருவாக ஏற்றுக்கொண்டு அவருடன் ஆசிரமத்தில் வாழும்போது, ஒரு நாள் பரமஹம்ஸரிடம் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி இவ்வாறு கூறினார்.

“1894ஆம் ஆண்டில் நடக்கவிருக்கும் கும்பமேளாவிற்குச் செல்ல மகாவதார பாபாஜி என்னை ஊக்குவித்தார். அதற்கிணங்கநான் அங்கு சென்றேன். நான் பாபாஜியைச்சந்தித்தேன்.

அவ்வமயம் அவர் என்னிடம் கூறியதாவது; கீழை நாடுகள் மற்றும் மேலை நாடுகளுக்கிடையே வரப்போகும் இணக்கமான பரிமாற்றத்தில் நீங்கள் ஆற்ற வேண்டிய பங்கு உள்ளது. சில வருடங்களுக்குப் பிறகு நான் உங்களி டம் அனுப்பும் ஒரு சீடனுக்கு மேலை நாடு களில் கிரியா யோகத்தைப் பரப்புவதற்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் எழுச்சி பெறக் காத்திருக்கும் உள்ளார்ந்த சக்தி வாய்ந்த மகான்களை நான் காண்கிறேன்.” இவ்வாறு இறைவனின் அருளாலும் மகாவதார பாபாஜியின் வழி காட்டுதலாலும் ஸ்வாமி ஸ்ரீ யுக் தேஸ்வர் கிரி பரமஹம்ஸ யோகானந்தரைத் தயார் செய் துள்ளார்.

உற்பத்தி

இறைவனின் அன்புக் கட்டளைக் கிணங்க, பாபாஜி யின் வழிகாட்டுதலில் பரமஹம்ஸ யோகானந்தர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி 1920ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு, சர்வதேச மிதவாதிகளின் மகாசபைக்கு இந் தியப் பிரதிநிதியாக அனுப்பிவைத்தார். அதற்கு முன்னர் 1917ஆம் ஆண்டில் பரமஹம்ஸ யோகானந்தர் “யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா” என்னும் பெயரில் ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள ராஞ்சியில் ஓர் தியான ஆல யம் நிறுவினார். அதன் பின் ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஸ்தாபனத்தின் சர்வதேச தலைமையகத்தை



அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்ஜலீஸில் 1925 ஆம் அண்டில் நிறுவினார். இவ்வாறு மேலே கூறிய இரண்டு ஸ்தாபனங்களையும் பரமஹம்ஸ யோகானந்தர் மனித இனத்தின் ஆன்மீக மேம்பாட்டிற்காக உற்பத்தி செய்துள்ளார்.

அது மட்டுமின்றி மேலே கூறப்பட்டுள்ள ஸ்தாபனங்களின் மாணவர்களுக்காக அதாவது தன்னுடைய சீடர்களுக்காக, இறைவனை அடைவதற்காக என்னென்ன செய்யவேண்டும் என்பதற்கான சிறந்த உடற்பயிற்சிகள் மற்றும் சிறந்த உத்திகள் அடங்கியுள்ள பாட திட்டங்களை எழுதி அமைத்து, அவற்றை இந்தப்பாதையில் வந்துள்ள தன்னுடைய அத்துனை சீடர்களுக்கும் மாதந்தோறும் அவர்கள் வீட்டிற்கே சென்று சேரும்படியும் அவற்றை மாணவர்கள் படித்து பயனடையும்படியும் குருதேவர் மிகுந்த அளவிலான உதவியைச் செய்துள்ளார்.

அவர் இவ்வாறு செய்தது மேற்படி ஸ்தாபனங்களின் மாணவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கிறதை நினைக்கும்போது மனித இனத்திற்கு இறைவன் அருளிய வரப் பிரசாதம் என்றுதான் கூறவேண்டும். இது போன்று மனித இனத்திற்காக உதவி செய்கின்ற நிறுவனங்கள் காண்பது அரிது. ஏனென்றால் மனித இனத்தை அவர் அளவு கடந்து நேசிக்கிறார் என்பதுதான் உண்மை. எனவே அவருக்கு “பிரேமாவதாரம்” என்ற பெயர் உள்ளது.

கிரியா யோகத்தை, பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அதன் பின்னர் காலப்போக்கில் இந்த யோகம் மறைந்துவிட்டது. பின்னர் மகாவதார பாபாஜி தன்னுடைய சீடரான லாஹிரி மகாசயருக்கும், அவர் தன் சீட ரான ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரிக்கும், அவர் தன் சீடரான

பரமஹம்ஸ யோகானந்தருக்கும் அருளினார். ஒரே நோக்கத்தைக் கொண்டுள்ள ஸ்தாபனங்களாகிய யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா மற்றும் ஸெல்ஃப் ரியலைசேஷன் பாதையில் வந்தவர்கள் கிரியா யோகத்தைப் பயிற்சி செய்துகொண்டிருக்கின்றனர். எதிர்காலத் தில் இப்பாதையில் வரப்போகின்ற சீடர்கள் அனை வரும் கிரியா யோக உபதேசத்தைப் பெறுவர். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸரின் ‘ஒரு யோகியின் சுயசரிதம்’ அத்தியாயம் 26ஐப் பார்த்தால் கிரியா யோகத்தைப் பற்றிய விவரங்கள் அறியலாம்.

அமெரிக்காவில், பரமஹம்ஸர், தன்சொற்பொழி வுகளில் இறைவனைத் தேடிக் கண்டுபிடிப்பது மட்டுமின்றி, மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என் றும் அதற்கான வழிமுறைகளையும் கூறியதல்லாமல் அவற்றை மக்களுக்காகவே அவர் விட்டுச் சென் றுள்ளார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எண் ணற்றவை. அந்தச் சொற்பொழிவுகள் இன்றைக்கு மிக உன்னதமான நூல்களாக பிரசுரிக்கப்பட் டுள்ளன. அவையெல்லாம் இன்றைக்கு மனிதவாழ் வின் முக்கிய அம்சங்களாக இடம் பெற்றுள்ளன.

பரமஹம்ஸர் அருளுகிறார்; “ கிரியா யோகம் என்பது மனித இரத்தத்திலுள்ள கரியத்தை அகற்றி, பிராணவாயுவின் மூலம் புத்துணர்ச்சி பெறச் செய்யும், மனஉடல் நூல் அடிப்படையிலான ஓர் எளிய முறையாகும். இந்த அதிகப்படியான பிராணவாயுவின் அணுக்கள் உயிரோட்டமாக உருமாற்றப்பட்டு மூளை மற்றும் முதுகுத்தண்டின் மையங்களையும் புத்துணர்ச்சி பெறச் செய் கின்றன. அசுத்த இரத்தம் பெருகுவதை நிறுத்து வதன் மூலம், யோகியானவன் திசுக்களின் அழி வைக் குறைக்கவோ தடுக்கவோ முடியும். நன்கு முன்னேறிய யோகி தன் செல்களை சக்தியாக மாற்றுகிறான். அநேக தீர்க்கதர்சிகள் ‘கிரியா’ அல்லது அதைப்போன்றதொரு உத்தியில் தேர்ந்த வராயிருந்ததன் மூலம் நினைத்த மாத்திரத்தில் தங்கள் உடல்களை உருவாக்கவோ மற்றும் உருக் குலைக்கவோ செய்தார்கள்.”

“கிரியா ஒரு புராதன விஞ்ஞானம். லாஹிரி மகாசயர் அவருடைய மகாகுருவான மகாவதார பாபாஜியிடயிருந்து அதைப் பெற்றார். பாபாஜி இருண்ட காலங்களில் இழக்கப்பட்டிருந்த இந்த யோக முறையை மறுபடியும் கண்டுபிடித்துத் தெளிவுபடுத்தினார். அவர் இந்த முறைக்கு எளிதாக ‘கிரியா யோகம்’ என்று மறுபெயர் கொடுத்தார்.” பாபாஜி, லாஹிரி மகாசயரிடம் கூறினார்; “நான் இந்த பத்தொன்பதாவது நூற் றாண்டில் உன் மூலமாக இவ்வுலகிற்கு அளிக்கும் கிரியா யோகம் பகவான் கிருஷ்ணன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அர்ஜுனனுக்கு அளித்த அதே விஞ்ஞான முறையின் புனருத்தாரணமாகும். பிறகு அது பதஞ்சலிக்கும் வேறு பல சீடர்களுக்கும் தெரிந்திருந்தது.

ஸ்ரீ யுக்தேஸ்வர் தன் மாணவர்களுக்கு விளக் கிக் கூறியதை குருதேவர் குறிப்பிட்டுள்ளார்: “கிரியா யோகம் மனிதனின் பரிணாம வளர்ச்சி யைத் துரிதப்படுத்தும் ஒரு கருவி. புராதனகால ரிஷிகள் பேரண்ட உணர்வு நிலையின் ரகசி யம் சுவாசத்தைக் கட்டுப்படுத்துவதுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறதுஎன்பதைக்கண்டறிந்த னர். இது உலக அறிவின் கருவூலத்திற்கு பாரதத்தின் ஒப்பற்றதும் சிரஞ்சீவித்தன்மையுடை டயது மான பங்கு ஆகும். பொதுவாக இதயத்தின் செயலை பராமரிப்பதற் காக கிரகிக்கப்படும் உயிர் சக்தியானது.. மூச்சின் இடையறாத தேவைகளை ஒரு வழிமுறையினால் சாந்தப்படுத்தியும் நிறுத்திவைத்தும்; இன்னும் உயர்ந்த நிலைகளில் இயங்குவதற்காக விடு விக்கப்பட வேண்டும்.”

குருதேவர் கூறுகிறார்: “ஒரு நாளில் 8–லுமணி நேரத்தில் பயிலப்படும் ஆயிரம் கிரியைகள் ஒரு யோகிக்கு ஆயிரம் வருடங்களில் ஏற்படும் இயற் கையான பரிணாம வளர்ச்சியின் பலனைக்கொடுக் கின்றன. 3,65,000 வருடங்களில் ஏற்படும் பரிணாம வளர்ச்சி ஒரே வருடத்தில் கிடைக்கிறது.

மூன்றே வருடங்களில் ஒரு கிரியா யோகி அறிவுடன்கூடிய தன் முயற்சியால் பத்து லட்சம் வருடங்களில் இயற்கை கொடுக்கக்கூடிய பரிணாம வளர்ச்சியை அடைகிறான்.

இந்தக் கிரியாவின் குறுக்குவழி மிக்கஆழ்ந்த முறையில் முன்னேற்றமடைந்த யோகிகளால் மட்டுமே செயல்படுத்த முடியும் ஒரு குருவின்வழி காட்டுதலுடன் அம்மாதிரியான யோகி கள் மிகத் தீவிரமான பயிற்சியால் ஏற்படும் சக்தி யைத் தாங்கு வதற்கு, தங்கள் உடலையும் மூளையையும் மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தியிருப் பார்கள்.”

“சாதாரண மனிதனுடைய உடல் ஓர் ஐம்பதுவாட் விளக்கைப் போன்றது. அதனால் அதிகப்படியான கிரியா பயிற்சியினால் உற்பத்தி செய்யப்படும் ஆயிரம் கோடி வாட் சக்தியை தாங்க முடியாது. கிரியாவின் இந்த எளிய மற்றும் குறைவில்லாத பயிற்சிகள் படிப்படியாகவும் முறை யாகவும் அதிகரிக்கப்படும்போது மனிதனின் உடல் சூட்சுமமாக நாளுக்குநாள் மாறுகிறது. இறுதியில் பரமாத்மாவின் முதல் ஸ்தூல செயல்







வெளிப்பாடான பேரண்ட சக்தியின் வரையற்ற ஆற்றலை வெளிப்படுத்தும் தகுதி உடைய தாகிறது.”

மேலும் அவர் கூறுகிறார்: “கிரியாயோகமா னது தவறாக வழிகாட்டப்பட்ட சில அதி உற்சாகி களால்கற்றுக்கொடுக்கப்படும் விஞ்ஞானமுறைக்கு ஒவ்வாத சுவாசப் பயிற்சிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. சுவாசகோசங்களில்பலவந்தமாக மூச்சை நிறுத்திவைப்பது இயற்கைக்குமாறுபட்டது என்பதுடன் நிச்சயமாக அது துன்பகர மானதாகும். ஆனால் கிரியா பயிற்சிமுதலிலிருந்தே அமைதியை அளிப்பதுடன் முதுகுத்தண்டில் இதமான உணர்வுகளுடன்கூடிய புத்துணர்ச்சியையும் அளிக் கின்றது என்பதை குருதேவர் போதிக்கிறார்.”

இவ்வாறான, மேன்மையான கிரியா பயிற்சியை குருதேவர், ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் எண் ணற்ற மனிதர்களுக்கு அளித்துள்ளார், அதனால் பலபேர் பயனடைந்திருக்கின்றனர். பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அளித்த கிரியா உபதேசத்தை மகாவதார் பாபாஜியின் அன்புக் கட்டளைக்கிணங்க, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி தன் சீடரான பரமஹம்ஸ யோகானந்தருக்கு பயிற்சி அளித்து, அது உலகமெங்கும் அவரால் அருளி வழங் கப்பட்டுள்ளது. அவர் கிரியா பயிற்சி அளித்தது மட்டுமின்றி, தன் சீடர்கள் பலரை இறைவனுடன் சேர்த்துள்ளார். குருதேவர் கூறியுள்ளதுபோல்,இன் றைய உலகத்தில் பலபேர் இறைவனைக் காட்டித் தருகிறேன் என்றும் அது தங்களால் முடியும் என்றும் சொல்லித்திரிகின்றனர். ஆனால் சொல் வதற்கு மட்டும்தான் முடியும்; செயல்படுத்த அவர்களால் முடியாது. ஏனென்றால் அப்படிக் கூறுபவர்கள் இறை வனுடன் இணைந்தவர்கள் அல்ல. அவர் களைநம்பி பலபேர் ஏமாறுகிறார்கள். கிரியா யோகத்தைத் தவறாகக் கற்றுத்தருபவர்களிடம் கற்றுக் கொண்டால் எவ்வளவு பெரிய விளைவை எதிர்கொள்ளவேண்டும் என்பதையும் அவர் உறுதி யாகக் கூறுகிறார்.

ஓர் உண்மையான குருவின் அடையாளம்என்ன வென்றால், தம் சீடனுக்கு எவ் வித ஆபத் துக்களும் வராமல் பாதுகாத்துக் கொள்வ துடன் முற்பிறவி மற்றும் இப்பிறவியிலுள்ள கர்மவினை கள் அவனைத்தாக்கவிடாமல்தடுப்பதும், அவற்றையெல் லாம் ஒட்டுமொத்தமாகத் துடைப் பதும், இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் ஆர்வத்தில் வரும் சீடர்களுக்கு இறைவனை அறியவைத்து, உணரவைத்து, காண வைத்து, இறைவனுடன் சேர்ப்பதே ஓர் உண்மையான குரு தன் தலையாய கடமையாக நினைக்கிறார்.

ஓர் ‘உண்மையான குரு, தன் சீடர்கள் தன் னைப்போன்று இறைவனை அடையவேண்டும்என்று விரும்புவார். அப்படிப்பட்டவர்தான் குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். அதுமட்டுமின்றி, அவர் இவ்வுலகிலுள்ள அத்துனை மனிதர்களை யும் இறைவனடி சேர்க்க வேண்டும் என்றுமனப் பூர்வமாக நினைக்கிறார்; அதற்காக உழைக்க வும் செய்கிறார். பொதுவாக, மனித இனத் தின் ஆன்மீக முன்னேற்றத்திற்காக அவர் இரவு பகலின்றி உழைத்தார்; இன்னும் உழைத்துக் கொண்டேயிருக்கிறார்.

எனவே, இன்றைய காலகட்டத்திலும் சரி, இனி வருங்காலத்திலும் சரி, ஒரு மனித ஆத்மா இறைவனுடன் இரண்டறக்கலக்க வேண்டுமென்றால், குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரும் அவரால் உற்பத்திசெய்யப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா மற்றும் ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆகிய இரு ஸ்தாபனங்கள் மற்றும் அவற்றைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற மாபெரும் குருமார்கள் மட்டுமே போதுமானதாகும் என்பதுதான் எமது உறுதியான நம்பிக்கையும் கருத்தும்.

அதனால் இந்த ஸ்தாபனத்தில் புகலிடம் கிடைத்தால் அதைவிட வேறு எதுவும் ஒரு மனித னானவனுக்குத் தேவையில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் குருவாகக் கிடைக்கப்பெற்றால், அது எந்தப்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனோ! என்பதுடன் அது ஒரு மகாபாக்கியமும்கூட என்றுதான் கூற வேண்டும். அதனால் ஏராளமானோர் இறைவனை அடைவர். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்ற எமது பணிவான கருத்தினை கூறிக்கொண்டு, அனை வருக்காகவும், அனைவரையும் இறைவனுடன் சேர்க்க வேண்டும் என்ற எமது பணிவான வேண்டுகோளை, அன்பு குருதேவரின் பொற்பாதகமலங்களில் தங்களின் பிறந்த நாளை முன்னிட்டு சமர்ப்பணம் செய்கிறேன். எமது ப்ரிய குருதேவா! தங்களின் இனிய பிறந்த நாள் அன்றும் அதற்கு முன்னரும் பின்னரும் அனைவரையும் ஆசீர்வதித்தருளுமாறு மிகப்பணிவுடன் என் சார்பாக வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் என்னையும் என்னுடன்இருப்பர்வர்களையும்ஆசீர்வதிக்கும்படியாகவும் தங்களை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். “ஹாப்பீ பர்த்டே டூ யூ குருஜீஞ்... ” வாழ்க பாரதம்! வளர்க கிரியா யோகம் !!

மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# மந்திரமும் வித்தையும்




வெறும் கையில் மோதிரம் வரவழைப்பது, வாயிலிருந்து லிங்கம் வருவது எல்லாம் மந்திரங்களால் முடியுமா? என்று சிலர் கேட்கிறார்கள் அவர்களுக்கு பதிலையும் தெளிவையும் தர வேண்டியது அவசியம்

மந்திர வித்தைகள் என்பது வேறு, கண்கட்டி வித்தைகள் என்பது வேறு. இரண்டையும் ஒன்றாக போட்டு நாம் குழப்பிக் கொண்டிருக்கிறோம். இந்த குழப்பல் வேலையை பல புகழ் பெற்ற சாமியார்கள் செய்து பல கோடி ரூபாய்க்கு அதிபதிகளாகவும் ஆகிவிட்டார்கள் இதற்கு எல்லாம் காரணம் மந்திர சாஸ்திரங்கள் பற்றிய அறிவு மக்களிடம் இல்லாததே ஆகும்.

ஒரு முறை திபெத் நாட்டிற்கு பண்டிதர் நேரு சென்ற போது அந்த நாட்டை சேர்ந்த ஒரு புத்த மத லாமா தனது மந்திர சக்தியால் நேருவின் தலைக்கு மேல் ஒரு மேக கூட்டத்தை வரவழைத்து பன்னீர் தெளிப்பது போல மழையை பெய்வித்தார். இத்தகைய மந்திர சக்திகளை பெற்ற பல லாமாக்கள் இன்று கூட திபெத் நாட்டில் உள்ளனர். அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஆதிக்க வெறி பிடித்த சீனாவிடமிருந்து தங்களது நாட்டை மீட்டு கொள்ள முடியாதா? முடியும். ஆனால் அவர்கள் அதை செய்ய மாட்டார்கள். காரணம் மந்திர சாஸ்திரம் அறிந்தவர்கள் கர்ம சாஸ்திரத்தையும் அறிந்தவர்களாகவே இருப்பார்கள். இந்த மாதிரி இத்தனை காலம் நடக்க வேண்டும் என்ற ஆண்டவனின் கட்டளையை மீறும் துணிச்சல் அவர்களுக்கு இருக்காது.

நடுத்தெருவில் மோடி மஸ்தான் வித்தை காட்டுவதை பலர் பார்த்திருப்பீர்கள். அந்த வித்தையில் சாதாரண கோழி முட்டை அந்தரத்தில் பறப்பதையும் பார்த்து வியந்திருப்பீர்கள். குருவி பறக்கலாம். முட்டை பறக்க முடியுமா? முடியும் ஒரு நல்ல கோழி முட்டையை மேல் புறத்தில் சிறிதாக ஓட்டை போட்டு உள்ளே இருக்கும் கருவை வெளியே எடுத்துவிட வேண்டும்.

வெறும் முட்டை ஓட்டை மட்டும் மார்கழி மாத பனியில் இரவு முழுவதும் தொடர்ச்சியாக பத்து, இருபது நாள் வைத்து எடுத்து உள்ளே இருக்கும் பனித்துளி வெளியில் போகாத வண்ணம் மெழுகால் அடைத்து விட வேண்டும். பிறகு வெய்யிலில் வைத்தால் உள்ளே இருக்கின்ற பனி உருகி ஆவியாகி மேல் எழும்பும் கூடவே முட்டையும் தூக்கி கொண்டு பறக்கும். சுற்றி இருக்கும் கூட்டத்தார் கூத்தாடியின் சக்தியை பார்த்து வியப்பார்கள். சிலர் பயப்படவும் செய்வார்கள்

இப்படி மந்திரத்தோடு சம்பந்தப்படாதஎத்தனையோ வித்தைகள் உள்ளன. சில வருடங்களுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட சாமியாரின் படத்திலிருந்து விபூதி கொட்டுவதாக ஒரு பெரிய தகவலே பரவியது. இப்படி விபூதி கொட்டுவது ஒன்றும் தெய்வீகமானது அல்ல. நீங்கள் விரும்பினால் உங்கள் படத்தில் இருந்து கூட விபூதி கொட்ட வைக்கலாம்.

உங்களுக்கு தெரிந்த நாட்டு வைத்தியர் யாரவது இருந்தால் அவரிடம் சிறிதளவு திமிர் பாஷானம் கேட்டு வாங்கி கொள்ளுங்கள் இது நாட்டு மருந்து கடைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும் அறிமுகம் இல்லாதவர்களுக்கு திமிர்பாஷானத்தை விற்க மாட்டார்கள்.

நீங்கள் வைத்தியரிடம் வாங்கிய திமிர் பாஷானத்தில் ஒரே ஒரு சொட்டு மட்டும் எடுத்து உங்கள் படத்தின் கண்ணாடியில் வைத்து விடுங்கள். அடுத்து ஆறு மணி நேரத்தில் விபூதி கொட்ட ஆரம்பித்து விடும்.

இது எப்படி நிகழ்கிறது என்றால் திமிர் பாஷானத்தின் தன்மை காற்றில் உள்ள தூசிகளை தனக்குள் இழுத்து வெளியிடுவதாகும். காற்றில் உள்ள தூசிகள் தான் வெள்ளை விபூதியாக கொட்டும்.



மேலும் இந்த திமிர்பாஷானத்தை வைத்து சில வித்தைகள் செய்யலாம். கற்பூரத்தை ஒரு பத்து நிமிடம் இதில் ஊற வைத்து ஒரு பாட்டலில் தனியாக எடுத்து வைத்து கொள்ளுங்கள். எதாவது யாகம், ஹோமம் நடக்கும் இடத்திற்கு சென்று சமித்து என்ற மர குச்சிகளின் மீது அந்த கற்புரத்தை வைத்து மந்திரம் சொல்வது போல் முணுமுணுத்து குப் என்று ஊதுங்கள், கரியமலவாயு பட்டவுடன் கற்பூரம் தானாக பற்றி கொள்ளும்,

நல்ல பருமனான கடப்பாறை கம்பி யை வளைத்து ஒடிக்க விரும்பு கிறீர்களா? அதற்கு ஒன்றும் நீங்கள் பயில்வானாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒடிக்க விரும்பும் கடப்பாரையை பத்து நாட்களுக்கு முன்பாகவே குலை தள்ளிய வாழை மரத்தில் நடுவில் சொறுகி வைத்துவிட வேண்டும்.



வாழை மர சாரானது இரும்பின் கட்டி தன்மையை நீர்த்து போக செய்துவிடும். பிறகு சுலபமாக ஒடித்து விடலாம். இப்படி கொதிக்கும் எண்ணெயில் கை விடுவது ஒன்றரை மணி நேரத்தில் கம்பு விதையை பயிராக்கி கதிர் தள்ள செய்தல் என்று எத்தனையோ வித்தைகள் உள்ளன. இவற்றை செய்து பார்க்க மந்திரம் தேவையில்லை. குறுக்கு புத்தி இருந்தால் போதும். இந்த மாதிரியான வித்தைகளை கற்று கொண்டவர்கள் தான் வெறுங்கையில் விபூதி வரவழைப்பது உட்பட பல வேலைபாடுகளை செய்கிறார்கள்.

இது தவிர குண்டலினி யோகத்தைமுறைப்படி கற்றவர்களுக்கு நீர் மேல் நடக்க முடியும். காற்றில் மிதக்க முடியும். கண்ணுக்குதெரியாமல் மறையவும் முடியும். ஆனால் அத்தகையவர்கள் அதை வெளியில் காட்டி பிழைப்பு நடத்தமாட்டார்கள். நமது சித்தர்களும், ஞானிகளும் செய்கின்ற சித்து விளையாடல்கள் ஆன்மிக நோக்கம் கொண்டதே தவிர இலாப நோக்கம் கொண்டது அல்ல என்பதை நன்கு உணர வேண்டும்.

மேலும் யோக பாதையில் செல்லுகின்ற துவக்க பயிற்சியாளர்களுக்கு இத்தகைய சித்துக்கள் மனதில் தெம்பையும், உற்சாகத்தையும் கொடுத்து அவர்களது முயற்சிக்கு நல்ல ஊக்க மருந்தாக அமையும்.

மேலும் ஒரு யோக பயிற்சியாளனுக்கு இறுதி நோக்கம் என்பது கடவுளை அடைவதை தவிர சித்துக்களை அடைவதில்லை. ஒரு யோகி சித்துக்களை காட்ட துவங்கிவிட்டால் அவன் தன் நிலையிலிருந்து கீழே நிலைக்கு வருகிறான் என்று அர்த்தம். சாதாரண மனிதர்களை திகைப்பிலும், வியப்பிலும் ஆழ்த்துவது ஒரு வித வியாபாரமே ஆகும்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# கொடிய பாவத்தை போக்கும் உருத்திராட்ச ஜெபம்





மனிதராய் பிறந்த அனைவருமே ஏதோ ஒரு வகையில் தங்கள் வாழ் நாளின் கணிசமான நேரத்தினையும், பாடுபட்டு சேர்த்த தங்களுடைய செல்வத்தினையும் கொண்டு செய்த பாவங்களை தீர்க்கவும், புண்ணியங்களை சேர்க்கவுமே செல விடுகிறோம். அநேகமாய் இதற்கு யாரும் விதி விலக்காய் இருந்திட முடியாது.

பாவங்கள் சேர்வதும், புண்ணியங்கள் சேர்வதும் நமது எண்ணம், செயல், சிந்தனைகளை ஒட்டியே அமை கிறது.

இதை உணர்ந்தவர்கள் பாவங்களை தவிர்த்து புண்ணியங்களை சேகரிக்கின்றனர். இப்படி அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களை தீர்க்கும் முறையொன்றினை அகத்தியர் அருளி யிருக்கிறார். இந்த முறையை இங்கே பகிரக் கார ணம் உருத்திராட்சத்தின் மகிமையாக கூறவரும் இடத்தில் அகத்தியர் இந்த செபமுறையினை விவரித் திருப்பதால்தான்...

வாருங்கள் அகத்தியர் மொழியில் இந்த முறையினைப் பற்றி பார்ப்போம்...

"நேரப்பா தேகசுத்தி நன்றாய்ச் செய்து
சிவசிவா வென்று திருநீறுபூசி
வடகிழக்கு முகமாக இருந்துகொண்டு
பக்குவமாய் ருத்திராட்சங் கையில்வாங்கி
விண்ணப்பா தான்நோக்கி நயமவசியென்று
விரும்பியே லட்சமுருவே செய்தால்
பண்ணியதோர் பாவமெல்லாம் மைந்தாமைந்தா
பருதிகண்ட பனிபோலே பறக்குந்தானே"

– அகத்தியர்

நன்கு நீராடிய பின்னர், உயர்ந்த திருநீற்றினை சிவ சிவ என்னும் சிவ மந்திரத்தைக் கூறியபடியே உடலில் பூசிக் கொள்ள வேண்டுமாம். பின்னர் உருத் திராட்ச மாலையினை கையில் எடுத்துக் கொண்டு வடகிழக்கு முகமாய் அமர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

இந்த நிலையில் வானத்தைப் பார்த்தவாறே “நயமவசி” என்னும் மந்திரத்தை உருத்திராட்ச மணி மாலையினை உருட்டியவாறே ஒரு லட்சம் தடவை செபிக்க வேண்டும் என்கிறார்.

**இப்படி செய்வதன் மூலம் சூரியனைக் கண்ட பனிபோல் பாவமெல்லாம் விலகி விடும் என்கிறார் அகத்தியர்.**



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# துளசியின் மகத்துவம்

துளசி மகாலட்சுமியின் மறு அவதாரமாக விளங்குவது, இந்த துளசி மருத்துவத்திலும் மிகப்பெரிய முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மகா விஷ்ணுவிற்கு பிரியமானது, செடி வகைகளிலே அதிக ஆராதிக்கப்படும் ஒரே செடிவகை துளசி, இயற்கையாகவே இந்த துளசியில் உள்ள மகத்துவங்கள் ஏராளமானது.

இவற்றையெல்லாம் விட வேத மந்திரங்களிலும், வழிபாட்டு முறைகளிலும் துளசிக்கு மிகப்பெரிய சிறப்புகள் உள்ளது.

அந்த சிறப்புகளில் ஒருசிலவற்றைப் பார்ப்போம்.

1. தனது வேரின் அடியில் சகல தீர்த்தங்களையும், நடுவில் சர்வ தேவதைகளையும், நுனியில் சர்வ வேதங்களையும் கொண்டது துளசி.

2. தன்னை தரிசிப்போரது சகல பாவங்களையும்போக்குபவள்.தன்னைஸ்பரிசிப்போரது மேனியைத் தூய்மைப்படுத்துபவள். தன்னை வணங்குவோரது சகல நோய்களையும் தீர்ப்பவள். தனக்கு நீர் வார்ப்போரைக் கண்டு எமனும் நடுங்குமாறு செய்பவள் (எம பயத்தைப் போக்குபவள்). தன்னை விதிப்படி பிரதிஷ்டை செய்பவர்களை (பூஜிப்பவர்களை), ஸ்ரீகிருஷ்ணரது அன்புக்குரியவர்களாகச் செய்பவள். தன்னை பூஜித்தால் மோக்ஷத்தை நல்குபவள்.

3. ஸ்ரீ துளசி, பவித்ரமானவள், பூஜிக்கத் தகுந்தவள், பிருந்தாவனத்தை வாசஸ்தலமாகக் கொண்டவள், ஞானம் நல்குபவள், ஞானமயமானவள், எவ்விதக் களங்கமும் அற்றவள், எல்லோராலும் பூஜிக்கப்படுபவள்.



4. ஸ்ரீ துளசியானவள், கற்புக்கரசி, பதிவிரதை. பிருந்தா என்ற ரூபமுடையவள். பாற்கடலைக் கடைந்த போது தோன்றியவள், (கறுப்பு, பச்சை, வெள்ளை) ஆகிய மூன்று வித வண்ணங்களை உடையவள். எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுபவள்.

5. ஸ்ரீ துளசி தேவி, ஸ்ரீதேவியின் தோழி. எப்போதும் சுத்தமானவள். (பறித்துப் பல நாட்கள் இருந்தாலும் சுவாமிக்கு அர்ச்சனை செய்திருந்தாலும் மற்ற புஷ்பம் போல் நிர்மால்யம் என்ற தோஷமில்லாதவள்), அழகிய பற்கள் உடையவள், பூமியைப் புனிதமாக்குபவள், எப்போதும் ஸ்ரீஹரியையே தியானிப்பவள், பகவானது பாதத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டவள்.

6.ஸ்ரீதுளசி, புனிதத்தின் திருவுருவமானவள். மிகச் சிறந்தவள், நல்ல வாசனையுள்ளவள், அமிர்தத்தோடு கூடவே தோன்றியவள், நல்ல தோற்றத்தையும், ஆரோக்கியத்தையும் தருபவள், மகிழ்ச்சியானவள், மூன்று சக்திகளின் (துர்கா, லக்ஷ்மீ, சரஸ்வதி) திருவடிவானவள்.

7. ஸ்ரீ துளசி தேவி மிகப் பிரகாசமானவள், தேவர்களாலும் முனிவர்களாலும் துதிக்கப்படுபவள், அழகிய திருவுருவம் உடையவள், ஸ்ரீவிஷ்ணுவின் மனதிற்குப் பிரியமானவள், பூதம், வேதாளம் முதலியவற்றால் உண்டாகும் பயத்தை நீக்குபவள், மஹா பாபங்களைப் போக்குபவள்.

8. விருப்பங்களை நிறைவேற்றுபவள், ஸ்ரீ துளசி தேவி. மேதா (மேதைத் தன்மை, நுண்ணறிவு) வடிவமானவள், ஒளி ரூபமானவள், வெற்றியை அளிப்பவள், சங்கு, சக்கரம், கதை, தாமரை இவற்றைத் தரித்திருப்பவள், தன் விருப்பத்திற்கேற்ற ரூபத்தை எடுக்கும் சக்தியுடையவள்.

9. மோட்சத்தைத் தருபவள், ஸ்யாம (கரும்பச்சை) வர்ணம் உள்ளவள் (என்றும் இளமையானவள்), மெல்லிய இடை உடையவள், அழகான கேசமுள்ளவள், வைகுண்டத்தை வாசஸ்தலமாக உடையவள், ஆனந்தத்தை அளிப்பவள், கோவைப்பழம் போன்ற உதடுகள் உள்ளவள், குயில் போன்ற குரல் உடையவள்.




10. பொன்னிறமானவள் (கபிலா என்ற பசு வடிவமானவள்), (கண்டகி) நதி உண்டாகக் காரணமானவள் (கண்டகீ என்ற நதி துளசீ தேவியின் உடலிலிருந்தும் துளசிச் செடி அவளது கேசத்திலிருந்தும் உண்டானதாக புராணம்), ஆயுள் விருத்தியைத் தருபவள் (பெண்கள் துளசியைத் தினமும் பூஜை செய்தால் கணவனின் ஆயுள் விருத்தியாகும்), வன (காடு) ரூபமானவள் (துளசி ஒரே செடியானாலும் புதர் போல் வளரும் என்பதால்), துக்கத்தை நசிப்பவள், மாறுதல் இல்லாத, இறைவனைப் போன்றவள், நான்கு திருக்கரங்களை உடையவள்.

11. கருடனை வாகனமாக உடையவள், சாந்தமானவள், புலனடக்கம் நிரம்பியவள், துன்பங்களைப் போக்குபவள், ஸ்ரீவிஷ்ணு மூலிகையாக உள்ளவள். (விஷ்ணுவுக்கு வேர் போன்றவள் துளசிக்கு விஷ்ணு மூலிகா என்று பெயர்), நன்கு வளர்ந்த தேகமுடையவள், தர்ம, அர்த்த காம பலன்களைத் தன்னை உபாசித்தவர்களுக்கு அளிப்பவள்.

12. மூன்று சக்திகளுக்கும் மேலான


ஆன்மிகமலர் மெயில் புக்



சக்தியானவள். மஹாமாயையின் ஸ்வரூபமானவள், லக்ஷ்மீயாலும், சரஸ்வதியாலும் பூஜிக்கப்படுகின்றவள், சுமங்கலிகளைப் பூஜித்தால் சந்தோஷமடைபவள். சகல மங்கலங்களையும் விருத்தி செய்பவள்.

13. சாதுர்மாஸ்ய உத்சவ காலத்தில் விசேஷமாகப் பூஜிக்கத் தக்கவள். சாதுர்மாஸ்யத்தில் தன்னை பூஜிக்கும் பக்தர்களுக்கு ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சந்நிதானமான வைகுண்டத்தை அடையும் பாக்கியம் அளிப்பவள், உத்தான துவாதசியில் விசேஷமாகப் பூஜிக்கத்தக்கவள். (சயன ஏகாதசி சுவாமி சயனிக்கும் நாள், பரிவர்த்தன ஏகாதசி புரளும் நாள், உத்தான ஏகாதசி சயன நிலையிலிருந்து எழுந்திருக்கும் நாள்), சகல தேவர்களாலும் பூஜிக்கப்படுகின்றவள்.

14. கோபியர்களுக்கும் அவர்கள் ப்ரேமை கொண்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையில் அன்பு பாலமாக இருப்பவள். அழிவற்றவள், முக்குணங்களுக்கப்பாற்பட்டவள் (நிர்க்குணா), பார்வதி தேவிக்குப் பிரியமானவள், அபமிருத்யுவைப் போக்குபவள் (துளசிவனம் உள்ள இடத்தில் அகால மரணம் ஏற்படாது), ராதா தேவிக்கு மிகவும் பிரியமானவள், மான் போன்ற விழிகளை உடையவள்.

15. வாடாத ரூபமுள்ளவள், அன்னம் போன்ற நடையழகை உடையவள், கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரம்ம தேவரால் வணங்கப்படுகின்றவள், பூலோகத்தில் வாசம் செய்பவள், சுத்தமானவள், ராமகிருஷ்ணாதிகளால் பூஜிக்கப்பட்டவள்.

16. சீதா தேவியால் பூஜிக்கப்பட்டவள், ஸ்ரீராமனது மனதிற்குப் பிரியமானவள், ஸ்வர்க்கத்தை அடைவிப்பவளாக இருப்பவள் (நந்தன ஸம்ஸ்திதா), சகல புண்ணிய தீர்த்தமயமானவள், மோட்ச வடிவானவள், உலகை சிருஷ்டிப்பவள்.

17. காலையில் தரிசிக்கத்தக்கவள், உடல் மற்றும் மனதின் களைப்பை அகற்றுபவள்,

18. ஸ்ரீவிஷ்ணுவின் பத்தினியாக விளங்குபவள், சகல சித்திகளையும் தருபவள், நாராயண ஸ்வரூபமானவள் (நாராயணீ), சந்ததியை நல்குபவள், தன் வேரின் மண்ணை பக்தியுடன் அணிபவரைப் புனிதப்படுத்துபவள்.

19. அசோகவனத்தில் உள்ளவள், சீதையால் தியானம் செய்யப்பட்டவள், தானே தனக்குப் புகலிடமானவள், கோமதீ, சரயூ ஆகிய புண்ணிய நதிகளின் கரையில் தோன்றி வளர்பவள். சுருண்ட கூந்தலை உடையவள்.

20. தகாதவர் உணவைப் புசித்த பாவத்தைப் போக்குபவள், தானம் செய்யும் போது விடும் நீரைச் சுத்தமாக்குபவள் (தானம் செய்யும் போது, துளசி தீர்த்தம் விட்டு தானம் செய்தாலே, தானத்தின் பலன் கிடைக்கும்). (துளசி தளத்தை) பிரசாதமாகக் காதில் அணிந்தால் மிக்க சந்தோஷம் அடைபவள், மங்களமானவள், விரும்பிய எல்லாம் அனைவருக்கும் அளிப்பவள்.

– தொகுப்பு: ஸ்ரீ பதி,
ஆவடி டேங்க் ரோடு, சென்னை



வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

மேலும் தொடர்பு கொள்ள:

தொடர்பு எண், வாட்சப் எண்

8825844033




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033


ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# எண்ணம், வடிவம், இரண்டும் வேறு வேறு

1. கடவுள் என்பது முன்கூட்டியே கொள்ளப்படுகின்ற ஒரு தத்துவம். இது நிச்சயமாக பஞ்சபூத முடிவும் இல்லை. ஆவேசம் கொள்ளுதல் என்ற நிலையும் இல்லை. ஒரு குறிப் பிட்ட தனிப்புத்தகமும் அல்ல.

2. எப்படியும் இல்லை என்றால் உன் னுடைய சுத்தமான நினைவுப் பிரக்ஞையை உணரும்சக்தி தானே உனது கடவுள்அல்லது உனது சுத்தமான நினைவுத் தன்மை இல்லையா? இல்லவே இல்லை. நமது நினைவுத் தன்மையை தனியாக எடுத்து உணருகின்ற வேறொரு உறுதி யான நிலையே கடவுளின் நிலை ஆகும்.

3. கடவுளின் உறுதியான எண்ணநிலையை அல்லது அவனது நினைவை யாருமே அறிய மாட்டார்கள். தெரிந்து கொள்ளவும் மாட் டார்கள். இதுதான் கடவுளின் தனித் தெய்வீகம்.



4. தெய்வீகத்தன்மை என்பது ஒரு மனிதனின் பிரத்யேகத்தன்மை ஆகும். அதன் சீர் சிறப்பு என்ற செல்வத்தன்மைகள் எல்லாம் ஒரு மனிதனின் அற்புத குணவெளிப்பாட்டின் எடை காட்டும் தன்மையை காட்டுகிறது.

5. தெளிவும் தெளிவுத்தன்மையும் ஆண்டவனின் நீதிக்கட்டளை கள். இந்த இரண்டு வார்த்தைகளுக்கு சமமான வார்த்தைகளே கிடையாது. அதனால் தெளிவுத்தன்மை என்பதும் தெளிவான மக்கள் என்பவர்களும் உண்மையின் நீதிபதிகளாக ஆகிறார்கள்.

6. நிறைவேற்றப்படுகின்ற கொள்கை என்றால் என்ன? கொள்கை என்பதே அதுதான். அதுவே நிறைவேற்றப்படும்பொழுது சிந்தனை என்று ஆகிறது. சிந்தனை என்பது கொள்கைகளை நினைக்கும்பொழுது தானாகத் தோன்றுகின்ற கொள்கையே அல்ல. ஏனென்றால் கொள்கையை சிந்தனை வடிவமாகவும் எண்ண நினைவாகவும் ஒன்றையே இரண்டுமுறை சிந்தித்து முடிவெடுக்க வழியே இல்லை. ஒன்று எண்ணம். மற்றொன்று வடிவம். இரண்டும் வேறு வேறு.

7. மிகவும் மேன்மையாய் கூடி சிந்திக்கின்ற ஒரு சிறிய குழுவை கொண்டதே கொள்கையை நிறைவேற்றுகின்ற குழுவாகும். சிந்தனைக்கு என்று ஏற்படுத்தப்பட்ட குழுவே எப்போதும் சிந்திக்கின்றது. நாட்டுக்கு செம்மையைத் தருவிக்கின்றது.

8. ஒரு நாட்டின் இயற்கையான எல்லைகள் நம்மால் வகுக்கப்படுவதில்லை. அது கடவுளால் ஏற்கனவே வகுக்கப்பட்டு விடுகிறது. இதுதான் ஆப்பிரிக்கா, இதுதான் இந்தியா என்பதைப் போன்றது. மனிதன்தான் இனி அந்நாட்டுக்குள் இருக்கின்ற உண்மைகளை வெளிக்கொணர்ந்து அதை உணர்ந்து அதன்படி செயல்பட வேண்டும்.

9. ஒரு நாட்டின் உரிமையுள்ள சொந்த இறையாண்மை என்பது நாமாக கண்டுபிடித்த ஒரு அற்புத வார்த்தை. அதனால் ஒருவரின் சொந்த இறையாண்மையுள் மற்றொருவர் தனது இறையாண்மையைப் புகுத்தக்கூடாது என்று சொல்லுகிறோம். ஆனால் எல்லா நேரங்களிலும் ஒவ்வொரு நாடும் தனது சொந்த இறையாண்மையை தானே ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

10. எப்பொழுதும் சண்டையைத் தூண்டாதே. போரை அறிவிக் காதே. இது மனிதன் செய்கின்ற மிகப்பெரிய பாபம் ஆகும்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# நம்பிக்கை இல்லாதவன் கோவிலுக்கு போக வேண்டாம்

# நம்புகிறவனை தடுப்பதற்கு அவன் யார்?

ஈ.வெ.ராமசாமி (பெரியார்) சேலத்தில் நடத்தியது போல் சென்னையிலும் ஒரு ஆபாச ஊர்வலம் நடத்த முயன்ற போது கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இது.

இதை தொடர்ந்து அந்த ஆபாச ஊர்வலம் கைவிடப்பட்டது.

கவிஞர் கண்ணதாசனின் எண்ணங்கள் ஆயிரம் என்ற நூலிலிருந்து!

நான் ஒரு இந்து. இந்து என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

நான் எல்லா மதத்தினரையும் மனமார நேசிக்கிறேன்; ஆனால் இந்துவாகவே வாழ விரும்புகிறேன்.

நான் கடவுளை நம்புகிறேன்; அவனைக் காட்டியவனைப் போற்றுகிறேன்;

அந்தக் கடவுளைக் கல்லிலும், கருத்திலும் கண்டு வணங்குகிறேன்.

ஆன்மா இறைவனோடு ஒன்றிவிடும்போது, அமைதி இருதயத்தை ஆட்சி செய்கிறது.

நாணயம், சத்தியம், தர்மம் இவற்றின் மீது நம்பிக்கை பிறக்கிறது.

நேரான வாழ்க்கையை இருதயம் அவாவுகிறது. பாதகங்களை, பாவங்களைக் கண்டு அஞ்சுகிறது.

குறிப்பாக ஒரு இந்துவுக்குத் தன் மத அமைப்பின் மூலம் கிடைக்கும் நிம்மதி, வேறு யாருக்கும் கிடைப்பதில்லை.

கடைசி நாத்திகனையும், அது ஆத்திகன் என்றே அரவணைத்துக் கொள்கிறது.

என்னை திட்டுகிறவன்தான் அடிக்கடி நினைத்துக் கொள்கிறான்; ஆகவே அவன்தான் முதல் பக்தன்" என்பது இறைவனின் வாக்கு.

இந்து மதத்தைப்போல் சகிப்புத்தன்மை வாய்ந்த மதம் உலகில் வேறு எதுவும் இல்லை .

நீ பிள்ளையாரை உடைக்கலாம்; பெருமாள் நாமத்தை அழிக்கலாம்; மதச்சின்னங்களை கேலி செய்யலாம்; எதைச் செய்தாலும் இந்து சகித்துக் கொள்கிறான்.

ஏதோ பரம்பரையாகவே பகுத்தறிவாளனாகப் பிறந்தது போல் எண்ணிக் கொண்டு,

பாத்திரத்தை நிரப்புவதற்காகவே சாஸ்திரத்தைக் கேலி செய்யும் பகுத்தறிவுத் தந்தைகள் இஸ்லாத்தின் மீதோ, கிறிஸ்துவத்தின் மீதோ கை வைக்கட்டும் பார்க்கலாம்.

கடந்த நாற்பது வருசங்களில் ஒரு நாளாவது அதற்கான துணிவு ஏற்பட்டதாக தெரியவில்லையே!

பாவப்பட்ட இந்து மதத்தை மட்டுமே தாக்கித் தாக்கி, அதை நம்புகிற அப்பாவிகளிடம் 'ரேட்டு' வாங்கிச் சொத்துச் சேர்க்கும் 'பெரியகுழந்தையை தத்து எடுத்தல்' மனிதர்களைத்தான் நான் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் பேசுகிற நாத்திக வாதம்,அவர்கள் 'குடும்பம் நடத்தும் வியாபாரம்' என்பதை அறியாமல், வாழ்கையையே இழந்து நிற்கும் பல பேரை நான் அறிவேன்.

பருவ காலத்தில் சருமத்தின் அழகு மினு மினுப்பதைப் போல், ஆரம்ப காலத்தில் இந்த வாதத்தைக் கேட்டு ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

நடிகையின் 'மேக் அப்' பைக் கண்டு ஏமாறுகிற சராசரி மனிதனைப்போல், அன்று இந்த வாதத்தைக் கேட்டு ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

அந்த கவர்ச்சி எனக்கு குறுகிய காலக் கவர்ச்சியாகவே இருந்தது இறைவனின் கருணையே!

என்னை அடிமை கொண்ட கண்ணனும், ராமனும் இன்று சந்திர மண்டலத்துக்குப் பயணம் போகும் அமெரிக்காவையே அடிமைக் கொண்டு, ஆன்மீக நெறியில் திளைக்க வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவை விடவா ஈரோடு பகுத்தறிவில் முன்னேறிவிட்டது?

வேண்டுமானால் 'பணத்தறிவில்' முன்னேறிவிட்டது என்று சொல்லலாம்.

ஆளுங் கட்சியாக எது வந்தாலும் ஆதரித்துக் கொண்டு, தன் கட்சியும் உயிரோடிருப்பதாகக் காட்டிக் கொண்டு, எது கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு வாழ்கையை சுகமாக நடத்துவதற்கு, இந்த நாத்திக போலிகள் போட்டிருக்கும் திரை, பகுத்தறிவு!

உலகத்தில் நாத்திகம் பேசியவன் தோற்றதாக வரலாறு உண்டே தவிர, வென்றதாக இல்லை.

இதை உலகமெங்கும் இறைவன் நிரூபித்துக் கொண்டு வருகிறான்.

அவர்கள் எப்படியோ போகட்டும்.

இந்த சீசனில் வாழ்ந்து கொண்டிருக்கும் சில மனிதர்கள் கோவில்களுக்கு முன்னால் பகுத்தறிவு விளையாட்டு விளையாடிப் பார்க்கலாம் என்று கருதுகிறார்கள். இதை அனுமதித்தால், விளைவு மோசமாக இருக்கும்.

நம்பிக்கை இல்லாதவன் கோவிலுக்கு போக வேண்டாம். நம்புகிறவனை தடுப்பதற்கு அவன் யார்?

அப்பாவி இந்துக்கள் பேசாமல் இருக்க இருக்க சமுதாய வியாபாரிகள் கோவிலுக்கு முன் கடை வைக்கத் தொடங்குகிறார்கள்.

வெள்ளைக்காரனின் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டு 'போகாதே போகாதே என் கணவா' என்று பாடியவர்களுக்கு நாட்டுப் பற்று எங்கிருந்து வரும்?

நாட்டு பற்று இல்லாதவர்களுக்கு தெய்வப் பற்று எங்கிருந்து வரும்? தெய்வப் பற்று இல்லாதவர்களுக்கு நாணயம், நேர்மை இவற்றின் மீது நம்பிக்கை எங்கிருந்து வரும்?

இந்த நாலரை கோடி (அன்று) மக்களில் நீங்கள் சலித்துச் சலித்து எடுத்தாலும், நாலாயிரம் நாத்திகர்களைக் கூட காண முடியாது.

பழைய நாத்திகர்களை எல்லாம் நான் பழனியிலும், திருப்பதியிலும் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

– கவியரசு கண்ணதாசன்



www.aanmeegamalar.com

# தத்து எடுத்தல்

1 திருமணமான ஜோடி கருத்தரிக்க முடியாத நிலை ஏற்படும்போது, குழந்தையை தத்தெடுத்துக் கொள்வது என்பது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் உலகம் முழுவதும் தத்து எடுக்கப்படுகின்றனர். முன்னேறிய நாடுகளில் ஒரு குழந்தையை தத்து எடுப்பதற்கு சுமார் 50,000 அமெரிக்க டாலர் வரை செலவிடப்படுகிறது. தத்தெடுப்பதால் அந்த தத்தெடுத்த குழந்தைக்கு ஒரு நல்ல ஸ்திரமான வாழ்க்கை அமையும் என்பது பொதுவான கருத்தாக இருந்தாலும், இந்த கட்டுரையில் ஆன்மீக பார்வையில் கீழ்க்கண்ட இரு விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

ஒரு குழந்தையை தத்து கொடுத்தல்

ஒரு குழந்தையை தத்து எடுத்தல்

2 மலட்டுத்தன்மை, கருத்தரிக்க முடியாத நிலை ஆன்மீக காரணிகள், குழந்தை இல்லாத குடும்பங்களில் குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கையானதே. கருத்தரிக்க முடியாது என்ற நிலை மிகுந்த மன வேதனையை தரக் கூடியது, அதிலும் அதனுடைய காரணம் தெரியாத போது அது மேலும் துக்கத்தை அளிக்கிறது.



**கருத்தரிக்க முடியாமல் இருப்பதற்கான காரணங்கள்**

1. மரபணு சார்ந்தது 20%
2. மன நிலையைச் சார்ந்தது 30%
3. ஆன்மீக காரணங்கள் 50%

3அ. மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்கள் 35%

3ஆ. தீய சக்திகளால் ஏற்படும் கஷ்டங்கள் 15%

தகவல்: SSRF.org 2014 ஆம் ஆண்டு நடத்திய ஆன்மீக ஆராய்ச்சி

1. மரபணு சார்ந்த காரணிகள் முட்டை வெளியேறுவதில் தடை, ஹார்மோன்களில் ஏற்றத்தாழ்வுகள், கருத்தரிக்கும் குழாயில் அடைப்பு, விந்துக்களில் முறைகேடு போன்றவை

2. மனநிலை சார்ந்த காரணிகள் மனச்சோர்வு அல்லது மனஅழுத்தம் ஆண்மைக் குறைவை ஏற்படுத்தி ஹார்மோன் நிலைகளில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தும்

3. ஆன்மீக காரணிகள்:

அ. ஒரு மருத்துவரால் மலட்டுத் தன்மையின் காரணத்தை விளக்க முடியாமல் இருக்கும்போது, அது ஒரு ஆன்மீக காரணமாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

ஆ. இறந்தமுன்னோர்களின் கஷ்டத்தினால் கருத்தரிக்க முடியாத நிலை ஏற்பட்டால் தத்தாத்ரேய தெய்வத்தின் நாமத்தை ஜபிப்பதால் இதிலிருந்து விடுபட முடியும்.

இ. குழந்தைகள் இல்லாத குடும்பத்தினர், தங்களின் தீவிர விதியை எதிர்கொள்ள இணங்க ஆன்மீக பயிற்சி செய்ய வேண்டும்.

ஈ. திருமணமான ஜோடி கருத்தரிக்க முடியாத நிலை ஏற்படும் போது, அது தெய்வ சித்தம் என்று ஏற்றுக் கொண்டு இப்பிறவியில் ஆன்மீகத்தில் முன்னேற முழு கவனம் செலுத்த வேண்டும்

உ. எவ்வாறாயினும், ஆன்மீக கண்ணோட்டத்தை பொறுத்தவரை குழந்தை பேறு இல்லாமை நமது விதி என்பதை அடையாளம் கண்டு கொண்டு அதனை ஏற்றுக் கொள்ளலாம்.

3 குழந்தையை தத்து எடுத்தல் மற்றும் தத்தெடுக்கும் குடும்பம் ஆகியவற்றின் ஆன்மீக விளைவுகள்

இன்றைய காலங்களில் ஏதோ ஒரு விதத்தில் மறைந்த மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்களை நம்மில் எல்லோருமே அனுபவித்து வருகிறோம். குழந்தைகள் இல்லாத குடும்பத்தினருக்கு மத்திய நிலை முதல் தீவிர நிலை வரை மூதா தையரால் ஏற்படும் கஷ்டங்கள் உள்ளன.

பெரும் பாலும் கருத்தரிக்க இயலாமைக்கு இதுவே ஒரு மூல காரணமாகும். தீவிரமூதாதையரின் கஷ்டங்கள் உள்ள ஒரு குடும்பத்தினர் ஒரு குழந்தையை தத்து எடுக்கும்போது இயல்பாகவே அக்குழந்தை மூதாதையரால் ஏற்படும் கஷ்டங்களையும் ஸ்வீகரித்துக் கொள்கிறது.

இதனால் அக்குழந்தை தானாகவே இரு குடும்பங்களையும் சேர்ந்த இறந்து போன மூதாதையரை ஸ்வீகரித்துக் கொள்கிறது. தத்து எடுக்கப்படுவதால் அந்த புதிய குடும்பத்துடனான ஒரு புதிய கொடுக்கல்வாங்கல் கணக்கு ஏற்பட்டு பிறப்பு இறப்பு என்ற சூழலில் மேலும் சிக்கிக் கொள்கிறது.

இதற்கு மாறாக, தத்து எடுத்த குழந்தை ஆவியால் அல்லது உயர் நிலை தீய சக்திகளால் பீடிக்கப்பட்டிருந்தாலோ பாதிக்கப்பட்டிருந்தாலோ, அதை தத்து எடுத்த குடும்பத்தினரும் பெரிய எதிர்மறை பாதிப்புக்கு ஆளாகிறார்கள். இது அந்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அதிக துயரத்தை கொடுக்கும்.

உடல் ரீதியான கஷ்டங்கள் மருத்துவத்தினால் குணப்படுத்தப்பட்டாலும் ஆன்மீகத்தால் ஏற்படும் கஷ்டங்களை தீவிரமான ஆன்மீக பயிற்சியினால் மட்டுமே எதிர்கொள்ள முடியும். செய்யத் தவறினால் இந்த ஆன்மீக கஷ்டங்கள் அடுத்த பிறவியிலும் தொடரும். இவை எல்லாவற்றையும் நாம் கருத்தில் கொண்டால், குழந்தையை தத்து எடுக்க மறுபரிசீலனை செய்யத் தோன்றும்.

3 தத்து எடுக்கும் பழக்கம் மற்றும் அதை தேர்ந்தெடுக்கலாமா என்பதன் சுருக்கம்

தத்து எடுத்துக்கொள்ள முனையும் குடும்பத்தின் கவனத்திற்கு :

இந்த பூமியில் மனிதனாகப் பிறந்ததேகடவுளின் ஆசீர்வாதத்தால்தான். காரணம், இத்தகைய பிறப்பில் மட்டும்தான் ஆன்மீகப் பாதையில் நாம் முன்னேற அதிகபட்ச முயற்சிகளை மேற்கொள்ள முடியும். அதனால் ஆன்மீகப் பார்வையில், பெற்றோர்களால் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படும் போது, அதை தன் விதியாக ஏற்றுக்கொண்டு ஆன்மீகத்தில் முன்னேறுவதில் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். இது தத்தெடுக்கும் குழந்தையுடன் புது கொடுக்கல்வாங்கல் கணக்கை ஏற்படுத்தாமல் இருக்க உதவும்.

அதை செய்ய மனம் ஒப்பாமல் கட்டாயம் குழந்தையை தத்து எடுத்துக் கொள்ள வேண்டும் எனத் தோன்றினால், ஆன்மீக பயிற்சி செய்வதன் மூலம் தங்களுக்கும் தத்தெடுக்கும் குழந்தைக்கும் மிகப் பெரிய நன்மையை செய்தவர் ஆவார். அதன் பலனாக இரு வழிகளிலும் ஏற்படக் கூடிய ஆன்மீக கஷ்டங்களைக் குறைப்பதற்கு இயலும்.

இறுதியாக, ஒரு குழந்தையை தத்து எடுப்பது அல்லது தத்து கொடுப்பது பொதுவாக ஒருவரின் கொடுக்கல் வாங்கல் கணக்கிற்கு ஏற்ப விதியின் ஒரு அங்கமாகக் கூட இருக்கலாம். ஆன்மீக பயிற்சி, மேன்மையான பாதையில் செல்வதற்குரிய வலிமையை நமக்கு அளிக்கிறது : அதாவது குடும்பத்தின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு எது சிறந்ததோ அதைத் தேர்ந்தெடுக்க வைத்து எதிர்மறை விதியையும் வெல்ல உதவுகிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும் www.hindujagruti.org

www.aanmeegamalar.com

# உலக வரலாற்றில் முதன் முறையாக







# இலவச e-mail-book

## எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

## உங்கள் இ–மெயில் முகவரியை

## கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

வாட்சப் எண் **8825844033**

**aanmeegamalar@gmail.com**

முடிந்த அளவு Share செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்